Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-17 | 03-10-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -228

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10477) T.P: 024-222 4247



# ஜெனீவாவில் எரிக் சூல்ஹெய்ம் இன்று புலிகளைச் சந்தித்துப் பேசுவார்!

## முக்கிய விடயங்கள் பிரஸ்தாபிக்கப்படலாம்



(ஒஸ்லோ)

**நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் இன்று ஜெனீவா சென்று அங்கு தங்கியுள்ள விடுதலைப்புலிகளின் அரசியற் குழுவினரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் எனத் தெரியவருகின்றது. விடுதலைப்புலிகளின் அரசியற்குழுவினர் இருநாட்கள் நடத்திய கலந்துரையாடலின் பின் இச்சந்திப்பு இடம்பெறுவதனால் இச்சந்திப்பு முக்கியத்துவம் கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

விடுதலைப்புலிகளின் அரசியற் குழுவினர் உட்பட நிபுணர்களும் கடந்த இரண்டு நாட்களாக இடைக்கால சபைக்கான திட்ட வரைவு குறித்தும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்துள்ள நிலையில் எரிக் சூல்ஹெய்ம் ஜெனீவா சென்று விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களும் அரசியல ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களும் ஜெனீவாவில் தங்கியிருக்கும் நிலையில் எரிக்சூல்ஹெய்ம் இவ்விஜயத்தை மேற் கொண்டிருப்பதனால் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும் விடு தலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்தும் விரிவாக ஆராயப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## சர்வதேச மனித உ. அமைப்புக்களைச் சந்திக்க யோசப் தலைமையில் 8பேர் ஜெனீவா பயணம்

தற்போது ஜெனீவாவில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் இணைந்து கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் 8 பேர் கொண்ட குழுவொன்று இன்று கொழும்பிலிருந்து ஜெனீவாவிற்குப் புறப்பட்டுள்ளது.

இக் குழுவில் விடுதலைப் புலிகளின் மனித உரிமைகள் செயலகத்தின் இணைப்பாளர் வண. பிதா பீ.கருணாரத்னம், உறுப்பினர்களான சட்டத்தரணி கா.சிவபாலன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வைத்திய கலாநிதி கே.சிவபாலன் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். குறிப்பாக இப் பிரதிநிதிகள் மனித உரிமைகள் தொடர்புடைய பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்திப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## எச்சந்தர்ப்பத்திலும் சிறி-இற்கு சீனா உதவத் தயாராக உள்ளது

### கொழும்பிலுள்ள சீனத்தூதுவர் தெரிவிப்பு

(பீஜிங்)

சிறிலங்காவிற்கு எந்தவோர் சந்தர்ப்பத்திலும் சீன அரசாங்கம் உதவி செய்யத் தயாராகவுள்ளதென சிறிலங்காவிற்கான சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார்.

சீனக்குடியரசின் 55 ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கை-சீன நட்புறவு அமைப்பினால் பண்டாரநாயக்க (12ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை மக்கள் வரலாற்றை தொலைத்து விட்டவர்களாக வாழ்கின்றனர்

### அக்கினிப் பறவைகள் –2 வெளியீட்டு விழாவில் வீரா

வரலாற்றை வழிபடும் மக்கள் என்றநிலையில் இருந்து திருகோணமலை மக்கள் வரலாற்றைத் தொலைத்து விட்ட மக்களாக வாழ்ந்து வருவதாக நிதர்சனம் வெளியீட்டுப் பிரிவின் போராளியும் கவிஞருமான வீரா தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவின் அக்கினி பறவைகள் 2 என்ற விவரணப்படவெளியீடு நேற்று முன்தினம் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது திருகோணமலை மாவட்ட மகளிர (12ஆம்பக்கம்பார்க்க)



விவரணப் படத்தை திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் வெளியீட்டு வைக்கிறார்.

## புலிகள்–இராணுவம் சந்திப்பு ஒத்திவைப்பு

மட்டக்களப்பில் எதிர்வரும் புதன்கிழமை விடுதலைப் புலிகளுக்கும், இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் இடம் பெறவிருந்த சந்திப்பு திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பா. உறுப்பினர் ஜெயானந்தமூர்த்திக்கு தேசவிரோதிகளால் கொலை அச்சுறுத்தல்

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்திக்குதேசவிரோதக் கும்பலொன்றினால் தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் கிரான் மகா வித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளக் கூடாது என்றே இந்த கொலை அச்சுறுததல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் ஆரம்பக் கல்வி கற்ற இப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில், பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி அழைக்கப்பட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமயத் தலைவர்,செயலாளர் உட்பட நான்கு பிரதிவாதிகளுக்கு நீதிமன்று அழைப்பாணை

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர், செயலாளர் உள்ளிட்ட நான்கு பிரதிவாதிகளுக்கு சிறிலங்காவின் உச்ச நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அபரக்கே புஞ்ஞானந்ததேரர்தான் அக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டது தொடர்பாகத் தாக்கல் செய்த மனுவை அடுத்தே இந்த அழைப்பாணை உச்ச நீதிமன்றினால் அனுப்பப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மெத்தானந்த தேரர், செயலாளர் சம்பிகரணவக்க, தயானந்த திஸ்ஸநாயக்க (தேர்தல் ஆணையாளர்), பாராளுமன்றச் செயலாளர் திருமதி பிரியாணி விஜேசேகரா ஆகிய நால்வருமே பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். எதுவித காரணமுமின்றி (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.இல் புலிகளின் தாக்குதலில் தேசவிரோதிகள் மூவர் உயிரிழப்பு

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இருவேறு சம்பவங்களில் மூன்று தேசவிரோதிகள் தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வாகனேரிப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் தேசவிரோதக்குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர் கருணா அணியைச் சேர்ந்த ரூபன் என்பவராவார். இவரது சடலமும், ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவருடன் இருந்த மேலும் இருவர் காயங்களுடன் அப்பகுதியிலுள்ள சிறிலங்கா கடற்படை முகாம் பக்கமாகத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறிப்பிட்ட தேசவிரோதிகளின் நடமாட்டம் குறித்து தகவலறிந்த விடுதலைப்புலிகள் வாகனேரிக் குளத்து (12ஆம் பக்கம் பார்க்க)

## அத்துமீறலை நிறுத்துமாறு குடாநாட்டு மீனவர் இந். மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக் கடற்பரப்புகளில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களால் யாழ்ப்பாண மீனவர்கள் 4கோடி ரூபாவிற்கும் மேற்பட்ட உடைமை இழப்புக்களைச் சந்தித்திருப்பதாக நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச சம்மேளன செயலாளர் S.சூரியகுமார் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகளால் குடாநாட்டு மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை சுமுக வழியில் தீர்ப்பது சம்பந்தமாக ஆராய்வதற்காக நேற்று இந்தியாவின் தமிழ் நாட்டு மீனவர் சங்கத் தலைவர் அருளானந்தம் தலைமையில் யாழ்ப்பாணம் வருகை தந்த இந்திய மீனவப் பிரதிநிதிகளை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தில் வைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், செ.கஜேந்திரன், கி.சிவநேசன் மற்றும் யாழ். மாவட்ட மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடியபோதே சூரியகுமார் இவ் (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

நேற்று முன்தினம் முல்லை மாவட்டம், புதுக்குடியிருப்புப் பகுதியில் தவறுதலான விபத்தொன்றின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ லெப்டினன்ட்- சுடரொளி. மயில்வாகனம்-தசரதன். சொ. முகவரி-செல்வநாதபுரம், திருகோண (12ஆம் பக்கம் பார்க்க)

# வடபிராந்திய பார ஊர்தி உ.கூ.சங்க புதிய பணிமனை திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

வடபிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பணிமனைத் திறப்பு விழா நிகழ்வு நேற்று பகல் 10.30 மணிக்கு சங்கத் தலைவர் பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளங்கினை தமிழீழ நிர்வாக சேவை நடுவப் பணியகத்தைச் சார்ந்த சின்னப்பமாஸ்ரர், கிளி, முல்லை. மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர்கள் இசையமுதன், முரளி, சங்கத்தின் முன்னாள் பொதுமுகாமையாளர் இராசரத்தினம் கிளிநொச்சி தமிழ்ச் சங்கச் செயலர் வே. பரமநாதபிள்ளை ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை கிளி. மாவட்ட அரசியல்துறைப்






பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைக்க, கூட்டுறவுக் கொடியினை கிளி. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏற்றி வைத்தார். சங்கப் பெயர்ப் பலகையினை தமிழீழ நிர்வாக சேவை துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் திரைநீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து சங்கத்தின் புதிய பணிமனையினை வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் முல்லை. அரச அதிபர் இமெல்டா சுகுமார், சிலிங்கோ நிறுவனத்தைச் சேர்ந்த ரங்கன், கூட்டுறவுச் சங்கத் தலைவர், பொதுமுகாமையாளர்கள் மற்றும் சங்க உறுப்புரிமை பெற்ற உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் ஆகியோர் கலந்து நிகழ்வினைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ,கு)


## வாழ்த்துகிறோம்

கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 2004ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கு எமக்கு ஏணிப்படிகளாக அமைந்த எமது அதிபர் ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்:-

சித்தியடைந்த மாணவர்களின் விபரம:- ச.பானுப்பிரியன்-160(1), ஆ.மதுராங்கி-143(8), செ.கௌசிகா-143(8), யோ.டேசிகன்-143(8), க.அபர்ணா-134(22), ம.றோஜினி-133(24)

தகவல்
பெற்றோர்/ மாணவர்

(சி.10448)



## பணி நிலை வேண்டுகை

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணிநிலைகளுக்கு பெண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து வேண்டுகைகள் கோரப் படுகின்றன.

**பணிநிலை 01:-கணக்காளர்**

கல்வித்தகமை :-பட்டதாரி வணிகம்
வேதனம் :- பட்டதாரிகளுக்குரிய வேதனம் வழங்கப்படும்.

**பணிநிலை 02:-மொழிபெயர்ப்பாளர்**

தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும், ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும் மொழி பெயர்ப்புச் செய்யவேண்டும்.

சம்பளம் :-பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதிநாள்:-15.10.2004.

முகவரி—விளம்பரம்—10,
ஈழநாதம்,
கிளிநொச்சி.

(5146)


## கிராம சேவகர்கள் கிழமையில் 5 நாட்கள் கடமையாற்றப் பணிப்பு

நாட்டில் உள்ள சகல கிராம சேவையாளர்களும் கிழமைக்கு ஐந்துநாட்கள் கட்டாயமாகத் தமது கடமைகளில் ஈடுபடவேண்டும் என இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.பி. மாணவப் பெறும தெரிவித்துள்ளார்.

சகல பிரதேச செயலாளர்களுக்கும் இது சம்பந்தமாக சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடமை நாட்களில் மாலை வரை காரியாலயத்தில் இருக்க வேண்டும். வேறு காரணங்களுக்காக வெளியில் செல்ல வேண்டுமானால் பிரதேச செயலாளர்களிடமிருந்து அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும். வேறு கிராம சேவையாளர் பிரிவில் கடமையாற்றுவதற்குச் செல்ல வேண்டுமானால் பிரதேச செயலர்களின் அனுமதி பெற்றுக் கிராம மக்களுக்கு இது சம்பந்தமாக அறிவிக்க வேண்டும் எனவும்இராஜாங்க அமைச்சின் செயலாளர் அறிவித் துள்ளார்.

## கிழக்கிற்குத் தனியான வானொலிச் சேவை

கிழக்கு மாகாணத்திற்கென்று தனியான வானொலிச் சேவையினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

சனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

இந்த வானொலிச் சேவையினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக பிரதி ஊடகத்துறைச் செயலக அறிக்கை கூறுகின்றது.

கடந்த 29ஆம் திகதி பிரதி ஊடகத்துறை அமைச்சர் கிழக்கு மாகாணம் சென்று வானொலிச் சேவை ஆரம்பிக்கப் பொருத்தமான இடத்தினைத் தெரிவு செய்ததாகக் கூறப்படுகின்றது.

## “விழி” இதழ் 49 வெளிவந்துள்ளது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் ஒக்ரோபர் மாத மருத்துவ இதழ் “விழி” வெளிவந்துள்ளது.

சிறப்பு மருத்துவப் போராளி நளா எழுதிய பற்களின் ஆரோக்கியத்தினைப் பேணுவோம் என்னும் தலைப்புச் செய்தியுடன் கருவின் தேவைகள், இரும்புச் சத்து, காய்ச்சல், மற்றும் பல சுகாதாரச் செய்திகளையும் “தொலைந்து போன ” எனும் சிறு கதையினையும் தாங்கி சுகாதார இதழான “விழி” இதழ் 49 வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ,கு)

## திறப்புவிழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருவையாறு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத் திறப்பு விழா நாளை பி.ப.4.00 மணிக்கு திருவையாறு வில்சன் வீதி கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி .அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களும், சிறப்புவிருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலர், கரைச்சி பிரதேச சபை விசேடஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் ஆகியோர் கலந்து நிகழ்வினைச் சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ,கு)


## விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நான்கு பரப்புக் கொண்ட மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு
024 4589416
077 6321271
077 6145316

(சி-10419)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – இலங்கை
### உயர்பட்டப்படிப்புகள் பீடம்
கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறி -2004
யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா வளாகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடத்தப்படும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கோரப்படுகின்றன.

01. அனுமதிக்குரிய தகைமைகள்:
*.அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்
*.ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம்.

அல்லது

மேற்படி கற்கை நெறிக்குப் பொருத்தமான கல்வி சார் பணிகளில் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் அனுபவம்.

2. கற்கை நெறிக்காலம் - ஓராண்டு
மாலை வேளைகளிலும் வார இறுதிநாட்களிலும் விரிவுரைகள் இடம்பெறும்.

3. தெரிவு முறைமை:
ஓர் எழுத்துத் தேர்வையும், நேர்முகத் தேர்வையும் உள்ளடக்கியது. இவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தினால் நடத்தப்படும். எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்.

4. கற்கை நெறிக்குரிய கட்டணம்.

| | |
|---|---|
| கற்கை நெறிக்குரியது | - 25000.00 |
| பதிவிக்கட்டணம் | - 750.00 |
| நூலகக் கட்டணம் | - 750.00 |
| நூலக வைப்புப் பணம் | - 1000.00(மீளப் பெறத்தக்கது) |
| மொத்தம் | - 27500.00 |

விண்ணப்ப முடிவுத் திகதி 22.10.2004

இக்கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் ரூபா 100 இற்கான பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர் யாழ்.பல்கலைக் கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 100 இற்கான காசுக் கட்டளை தபாற்கட்டளையுடன் ரூபா 4.50 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட தபால் உறையினையும் பீடாதிபதி பட்டப்பின் படிப்புகள் பீடம் யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு அனுப்புதல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்

(சி.10247)



## நெல் விற்பனைக்கான கேள்வி கோரல்

வவுனியா வடக்கு பல நோ.கூ.சங்கத்தில் இருப்பாக இருக்கும் முதல் தர சிவப்பு இன நெல்(2003/ 2004 காலபோக உற்பத்தி) 100000 கிலோ (பத்து லோட்) இற்கு மேற்பட்ட தொகை விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்வி கோரப்படுகின்றது. கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைய நெல் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் “தலைவர் வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கம் ,நெடுங்கேணி என்ற முகவரிக்கு 07-10-2004ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன் நேரடியாகவோ,பதிவஞ்சல் மூலமாகவோ தமது கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம். நெல்லைப் பார்வையிட விரும்புபவர்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் எமது களஞ்சியத்தில் பார்வையிடலாம். கேள்வியின் இடது பக்க மேல் மூலையில் “நெல் கொள்வனவுக்கான கேள்வி” எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

நிபந்தனைகள்

.......................

01.கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் 07-10 2004 ஆம் திகதி பி.ப.2.10 மணிக்கு கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமாயிருத்தல் வேண்டும்.

02.நெல்லிற்கான கொடுப்பனவுகள் முழுவதும் பணமாகவே செலுத்தப்படல் வேண்டும். (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

03.தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் முடிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து 48 மணி நேரத்திற்குள் முழுப் பணமும் செலுத்தி நெல்லைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

04.கேள்விகள் பூரண விபரங்களுடன் தெளிவாக உறுதி மொழியுடன் அமைந்திருத்தல் வேண்டும் .(தெளிவற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

05.கேள்விப்பத்திரக் குழுவின் முடிவே இறுதியானதாகும்.

தலைவர்.
வ.வ.ப.நோ.கூ.சங்கம்.

(5143)

# ஈராக்-சமறா நகரை மீட்டதாக அமெரிக்கப்படைகள் அறிவிப்பு!

-மோதல்கள் தொடர்வதாக வேறு தகவல்கள் தெரிவிப்பு

(பாக்தாத்)

**ஈராக்-சமறா நகரைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக அதன் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கத் துருப்பினரும், ஈராக் படையினரும் அறிவித்துள்ளனர். ஆயினும் ஆங்காங்கே மோதல்கள் இடம்பெறுவதாக வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன.**

மேலும் சமறா நகரில் மக்கள் நடமாடத்தயங்குவதாகவும், வீடுகளுக்குள் முடங்கிக்கிடப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமறா நகரைக் கைப்பற்றுவதற்காக அமெரிக்கப்படைகள் நடத்திய தாக்குதலில் 100இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும், பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தும் உள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் தீவிரவாதிகள் எனத் தெரிவித்திருப்பினும் அதில் சிறுவர்கள், பெண்கள் உட்பட பலர் உள்ளடங்கியிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஈராக்கில் வடக்கே அமைந்துள்ள மொசூல் நகர்ப்பகுதியில் வீதி ஓரக்குண்டு வெடிப்பு இடம்பெற்ற பகுதிக்கு அமெரிக்கக் கவச வாகனங்கள் வந்தடைகின்றன.



பலூஜாவில் வெள்ளிக்கிழமை இரவு அமெரிக்கப்படையினரின் விமானத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதத்தை உள்ளூர்வாசிகள் பார்வையிடுகின்றனர்.

## மசூதி மீது குண்டுத்தாக்குதல் பாகிஸ்தானில் 20பேர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஷியா முஸ்லிம்களின் மசூதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 20பேர் பலியானார்கள். 40பேர் காயம் அடைந்தனர்.

பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் உள்ள சியால்கோட் நகரில் அமைந்துள்ள மிஸ்ரி அப்துல்லா இமாம்பர்காக் பெயரிலான ஷியா முஸ்லிம்களுக்குச் சொந்தமான மசூதி மீதே குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அங்கு வெள்ளிக்கிழமை தொழுகை நடந்து கொண்டிருந்ததாகவும், இதில் 500பேர் கலந்து கொண்டிருந்ததாகவும், அப்போதே குண்டு வெடித்துள்ளது. இதில் 20பேர் பலியானார்கள். 40பேர் காயமடைந்தனர்.



பாகிஸ்தான் வழிபாட்டுத்தலம் மீது குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டதையடுத்து அங்கு காயமடைந்த ஒருவர் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்படுகிறார்.

## வரியற்ற வர்த்தகத்திற்கு காஷ்மீர் பிரச்சினை தடையாகவுள்ளது

-ப.சிதம்பரம்

(வோஷிங்டன்)

தெற்காசிய வரியற்ற வர்த்தகம் தொடர்பான பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமானால் பாகிஸ்தான் காஷ்மீர் பிரச்சினையை இதனுடன் சம்பந்தப்படுத்தக் கூடாது என்று மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

வோஷிங்டனில் உலக வங்கிக் கருத்தரங்கில் நேற்று முன்தினம் அவர் கலந்து கொண்டார். அங்கு உரையாற்றிய அவர், இந்தியா, தெற்காசிய வரியற்ற வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை முன்னோக்கி எடுத்துச் செல்லத் தயாராக உள்ளது என்றும், கடந்த 40 அல்லது 50 ஆண்டுகளாக இந்தியா பாகிஸ்தானிடையே நிலவும் காஷ்மீர் உள்ளிட்ட இருதரப்புப் பிரச்சினைகளே இடையூறாக விளங்குகின்றன என்று கூறியுள்ளார்.

எந்தவிதமான வர்த்தக ஒப்பந்தத்திற்கும் சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளும் பரஸ்பரம் அதிக முன்னுரிமை பெறும் சலுகை பெறும் நாடாக அங்கீகரிப்பதுதான் அடிப்படையானது. என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் பாகிஸ்தானைச் சேர்ந்த அதிகாரிகளும், அரசு சாராப்பிரதிநிதிகளும், அரசியல் பிரச்சினைகளும் வரியற்ற வர்த்தகமும் இணைந்தே செல்ல வேண்டும் என்று வலியுறுத்தினர். இதற்குப் பதிலளித்த சிதம்பரம் இவ்வாறு கூறியுள்ளார்.

## இந்தோனேசிய புதிய சனாதிபதிக்கு நெருக்கடி சத்தியப் பிரமாண வைபவத்தையும் தவிர்ப்பு!

இந்தோனேசியாவின் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சத்தியப் பிரமாணம் நடைபெற்றுள்ளது. எனினும் புதிய சனாதிபதி இதில் கலந்துகொள்ளவில்லை. இந்தப் பாராளுமன்றத்தில் 550 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். மக்கள் நேரடியாகத் தெரிவு செய்த முதலாவது சனாதிபதியான சுசிலோயுதோயோனோ சத்தியப்பிரமாண வைபவங்களில் பிரசன்னமாகியிருக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

யூதோயோனேவை எதிர்க்கக் கூடிய சக்திகளே பாராளுமன்றத்தில் கூடுதலாக அங்கம் வகிக்கின்றன. மக்கள் சபை சனாதிபதிக்குத் தலையிடியாக அமையக் கூடும் என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

இந்தோனேசியாவில் இராணுவத்தின் பலத்தைக் குறைப்பதற்காகப் பாராளுமன்றத்தில் அதற்கு ஒதுக்கப்பட்டிருந்த 38 ஆசனங்கள் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### ஆறு கிளர்சியாளர் பலி

(காத்மண்டு)

நேபாளத்தில் அரச இராணுவத்தினருக்கும் மாவோவாதக் கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையே நேற்று இடம்பெற்ற மோதலில் ஆறு கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாவோவாதிகள் கூட்டம் நடத்திக்கொண்டிருந்த பகுதியை இராணுவத்தினர் சுற்றிவளைத்தபோது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் திருப்பித்தாக்கிய இராணுவத்தினா ஆறு பேரைக் கொன்றுள்ளதாகவும தெரிவிக்கப்படுகின்றது.

## ஈராக் தீவிரவாதிகள் வசம் 10 பணயக் கைதிகள்!

ஈராக்கில் 2 இந்தோனேசியப் பெண்கள் உட்படப் 10 பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பதாக ஜர்காவி என்ற தீவிரவாத இயக்கம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே சிறைப்பிடித்த அமெரிக்கர்கள், ஆம்ஸ்ட்ராங், ஜேக் ஹெஸ்லி ஆகியோரைக் கொன்றுவிட்டதாகவும், தற்போது பணயக் கைதியாக இருக்கும் இங்கிலாந்தைச் சேர்ந்த கென்னத் பிக்லேயையும் கொல்வோம் என்று அந்த இயக்கம் மிரட்டியுள்ளது. புதிதாகப் பிடித்துச் செல்லப்பட்டுள்ள 10 பேரில் இருவர் இந்தோனேசியப் பெண்கள், அறுவர் ஈராக்கியர், லெபனான் பிரஜைகள் இருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் இராணுவம் தீவிர தாக்குதல் கடந்த நான்கு நாட்களில் 45 பேர் பலி

(டெல்அவிஸ்)

இஸ்ரேலிய இராணுவத்திற்கும் பலஸ்தீனப் போராளிகளுக்கும் இடையிலான மோதல்கள் தீவிரமடைந்துள்ளன.

இஸ்ரேலிய இராணுவத்தினர் நேற்று நடத்திய தாக்குதலில் ஏழு தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த நான்கு வருடங்களில் இடம்பெற்ற மோதல்களில் இது மிகவும் மோசமானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதனன்று கமாஸ் இயக்கத்தின் ரொக்கட் தாக்குதலில் இரண்டு இஸ்ரேலியச் சிறுவர்கள் கொல்லப்பட்டதை அடுத்து இஸ்ரேலிய இராணுவம் நடத்திவரும் மிக மோசமான தாக்குதலில் இதுவரை 45 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

பலஸ்தீனர்களின் ரொக்கட் தாக்குதல்களைத் தடுக்கும் வகையில் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளுமாறு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனும் அவரது அமைச்சரவையும் மக்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத் இந்தத் தாக்குதல் குறித்து கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த மனிதாபிமானமற்ற குற்றச் செயல்களை நிறுத்துமாறு உலக நாடுகள் இஸ்ரேலிடம் வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பிளேயரைப் பின்பற்ற மறுக்கும் ஹவார்ட்

(கான்பரா)

"ஈராக் போர் தொடர்பாகத் தவறான தகவல் கொடுத்ததற்காக இங்கிலாந்துப் பிரதமர் டோனிபிளேயர் மன்னிப்புக் கேட்டிருக்கிறார். அது போல நான் மன்னிப்புக் கேட்க மாட்டேன்" என்று அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன்ஹவார்ட் கூறியிருக்கிறார். வருகிற 9ஆம் திகதி நடக்கும் தேர்தலையொட்டிய பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள அவர் "பிளேயரை நான் பின்பற்ற மாட்டேன். உளவுத் துறை மூலமாக எங்களுக்குத் தரப்பட்ட தகவல்களை நான் நம்புகிறேன் எங்களுக்குக் கிடைத்த தகவலகளின் அடிப்படையில் நாங்கள் போர் தொடுப்பது என்று முடிவெடுத்தோம். இதற்காக நான் மன்னிப்புக் கேட்கமாட்டேன்" என்று கூறினார்.



பாகிஸ்தான் வழிபாட்டுத்தலம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டவரின் பிரேதப்பேழையை முஸ்லிம் மக்கள் ஒன்றுசேர்ந்து காவிச் செல்கின்றனர்.

## தொலைக்காட்சி கருத்துக்கணிப்பு: ஜோன்ஹெரி வெற்றி பெற்றார்

(நியூயோர்க்)

ஜோன் ஹெரிக்கும், ஜோர்ஜ்புஷ்சுக்கும் இடையில் நடைபெற்ற நேருக்கு நேர்வாதத்தில் வென்றவர் ஜோன்ஹெரி என வாக்காளர்கள் மத்தியில் அமெரிக்கத் தொலைக்காட்சி நிறுவனங்கள் நடத்திய உடனடிக் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

வாதத்தைத் தொலைக்காட்சியில் பார்த்த 531 வாக்காளர்களிடம் ஏ.பி.சி தொலைக்காட்சிக் கருத்துக் கணிப்பு நடத்தியது. வாதத்தில் ஜோன் ஹெரி வென்றதாக 45 சதவீத பேரும், புஷ் வென்றதாக 36 சதவீத பேரும தெரிவித்தனர்.

சி.என்.என் தொலைக்காட்சி நடத்திய கருத்துக் கணிப்பில் 46 சதவீதம் பேர் ஹெரி வென்றதாகவும், 37 சதவீத பேர் புஷ் வென்றதாகவும் தெரிவித்தனர். 200 வாக்காளர்கள் மத்தியில் சி.பி.எஸ் தொலைக்காட்சி நடத்திய கருத்துக் கணிப்பில் 44 சதவீதம் பேர் ஹெரி வென்றதாகவும், 26 சதவீத பேர் புஷ் வென்றதாகவும் கூறினர்.

# திருமுறிகண்டி வர்த்தக நிலையப் பகுதிகளில் கழிவுகள் சீராக அகற்றப்படாமையால் ஆபத்து

–விரைவான நடவடிக்கைக்கு அழைப்பு

(திருமுறிகண்டி)

**பல ஆயிரக்கணக்கான பயணிகள் தினமும் தரித்து நின்று செல்லும் பிரதான இடமாக திருமுறிகண்டி விளங்கி வருகிறது. இப் படியான பிரதான பொது இடமான திருமுறிகண்டி வர்த்தகநிலைய வீதிப்பகுதியின் சுகாதார நிலைமை மிகமோசமடைந்து வருகிறது. இதற்குப் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் கவனக்குறைவே காரணமாக இருக்கின்றது.**

திருமுறிகண்டி வர்த்தக நிலையஙகளில சேரும் கழிவுப் பொருட்களையும் பயணிகளால் வீசி எறியப்படும் கழிவுப் பொருட்களையும் தினமும் சுத்தம் செய்து தூரமான இடங்களுக்கு எடுத்துச் சென்று எரித்து அழிப்பதற்கென சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் ஓரளவு நிதியை புதுக்குடியிருப்பு பிரதேச சபைஅனுமதியுடன் மாங்குளம் அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கி வருகின்றனர்.

என்றாலும் தற்போது சில வாரங்களாக வாரத்தில் 2 அல்லது 3 நாட்கள் மட்டுமே இக் கழிவுப் பொருட்கள் அகற்றப்படுவதால் இக்கழிவுப் பொருட்களின் துர்நாற்றமும் சில உணவகங்களிலிருந்து மாலை 5.00 மணிக்குப் பின்பும் அதிகாலை நேரமும் கழிவு நீர்களைத் திறந்துவிடும் போதும் முகம் கொடுத்து சுவாசிக்க முடியாத துர்மணம் அப்பகுதிகளிலிருந்து காற்றில் பரப்பப்படுகிறது. மொத்தத்தில் திருமுறிகண்டி சுகாதார நிலை மோசமடைந்து வருகிறது. வர்த்தகநிலைய உரிமையாளாகள் கூடுமானவரை ஒத்துழைப்பு கொடுத்தும் புதுக்குடியிருப்புப் பிரதேசசபையும், மாங்குளம் அபிவிருத்தி நிறுவனமும் அக்கறையின்றி இருந்து வருகிறது. புதுக்குடியிருப்பு பிரதேசசபை கடந்த சில மாதங்களாக திருமுறிகண்டி பிரதேசத்திலிருந்து பெறப்படும் மணல் ஏற்றிச் செல்லும் பாரஊர்தி வரிப்பணமாக பல்லாயிரம் ரூபாய்கள் வருமானத்தை மாதா மாதம் பெற்று வருகின்றது. என்றாலும் திருமுறிகண்டியின் அபிவிருத்தியில் எவ்வித கவனமும் செலுத்தப்படுவதில்லை என திருமுறிகண்டி பொது மக்கள் கூறி வருகின்றார்கள்.(09)

## முத்தரப்புபேச்சுக்கள்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று வட்டமடு பிரதேச காணிப்பிரச்சினையை தீர்க்கும் வகையில் நாளை திங்கட்கிழமையன்று முத்தரப்புப் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளது. இதில் தமிழீழ விடுதலைப்புலிகள், படைத்தரப்பு, முஸ்லிம்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (32)




கிளிநொச்சி நகரூடாகச் செல்லும்ஏ-9 நெடுஞ்சாலையில் கந்தசுவாமி ஆலயம் முன்பாகவுள்ள அகலம் குறைந்த பாலத்தையே படத்தில் காண்கிறீர்கள். இப் பாலம் இன்னமும் தேவைக்கேற்ப அகலப்படுத்தும் புணி இடம் பெறாமையால் போக்குவரத்தில் பெரும் ஆபத்து எதிர்கொள்ளப் படுகின்றது. (படம்-சோ,கு)

# சுயவிருப்பில் இணையும் சிறுவர்களை புலிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பது பாராட்டுக்குரியது

யுனிசெப் பிரதிநிதி பற்றிக் கம்பல்

சுயவிருப்பின் பேரில் இணைய வரும் வயது குறைந்தசிறார்களை விடுதலைப்புலிகள் தமது பெற்றோரிடம் ஒப்படைத்து வருவது பாராட்டத்தக்கதும், வரவேற்கத்தக்கதொரு விடயமு மாகும்.

இவ்வாறு கடந்த வியாழனன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தமது சுயவிருப்பின் பேரில் இணையவந்த இரு சிறார்களைக் கொக்கட்டிச் சோலை மாவட்டச் செயலகத்தில் வைத்து யுனிசெப் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்த வேளை இலங்கைக்கான யுனிசெப் பிரதிநிதி பற்றிக் கம்பல் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறான நிகழ்வுகள் வடக்குக் கிழக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின் றது.

விடுதலைப்புலிகள் தமது அமைப்பில் இணைய வரும்வயது குறைந்த சிறார்களை அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்து, அவர்களுக்கான கல்வி வசதி களை மேற்கொள்ள நடவடிக்கையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆனால் சில ஊடகங்கள் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருவதையும் காணக்கூடியதாய் உள்ளது என்றாா.

# துவிச்சக்கரவண்டி மோதியதில் சிறுவனின் கால் முறிந்தது

(முள்ளியவளை)

முள்ளியவளை பொன்னகர் வீதியில் கடந்த 27ஆம் திகதி ப.அனுசாந (வயது -05) என்ற சிறுவன் மீது துவிச்சக்கரவண்டி மோதியதில் சிறுவனின் கால்முறிந்தது. முள்ளியவளை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றபோது வைத்திய அதிகாரி இல்லாமையினால் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அவசர சிகிச்சை வழங்கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக மேற்படி சிறுவன் யாழ்.போதனாவைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. (ஆ)

# பிரதான வீதியருகே மதுபான நிலையம் போக்குவரத்திற்கு பெரும் இடையூறு!

கிளிநொச்சி சேவியர்கடைச் சந்தியில் அமைந்துள்ள மதுபான நிலையத்தினால் போக்குவரத்து செய்வது மிகவும் இடைஞ்சலாகவுள்ளது. பிரதான வீதிக்கு அருகே இந்த மதுபான நிலையம் அமைந்திருப்பதனால், மது அருந்துபவர்கள் கூடும் போது வீதிப்போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்றது.

அத்துடன் மது அருந்தி விட்டு சண்டைகளும் நடைபெறு வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இந்த வீதியினால் பயணிப்பது பெரும சிரமத்தை ஏற்படுத்தி இருப்பது கண்கூடு குறிப்பாக பெண்கள் இவ்வீதியினால் பயணம் செய்வதற்கு அச்சம் வெளியிட்டு வருகின்றனர்.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரப்படுகின்றது.



வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய அலுவலகத் திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பூந்தோட்டம் மகாவித்தியாலய அதிபர் கருணாநிதி அலுவலகத்தினைத் திறந்து வைப்பதனையும் கட்டுறு பயிலுனர் செல்வி சு.டெனற் பாடசாலை இலச்சினையை அதிபர் திருமதி L.F நடேசமூர்த்தியிடம் கையளிப்ப தனையும் படங்களில் காணலாம். (ஆறு்.சுபாஸ்கரன் வவுனியா செய்தியாளர்)

# சாதனைகள் படைத்த ஆசிரியர்கள் உலக ஆசிரியர் நாளில் கௌரவிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தெற்கு கல்வி வலயப்பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் பல்வேறு சாதனைகளைப் படைத்த ஆசிரியர்கள் உலக ஆசிரியர் நாளில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அந்த வகையில் ஆசிரியர்கள் தங்கள் பாடசாலையில் கற்பிக்கின்ற பாடங்களில் அல்லது இணைபபாட விதான செயற்பாடுகளில் ஏற்படுத்திய சாதனைகளுக்காக பரிசில்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் மேலதிக வகுப்புக்களை வைத்து மாண வர்களின் அடைவுத்திறனை மேம் படுத்திய ஆசிரியர்கள் அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளில் தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு மேல் வினைத்திறனுடன் கடமையாற்றுகின்ற அதிபர், ஆசிரியர்கள்,2003 ஆம் ஆண்டில் ஐந்து நாட்களுக்கு குறைவான லீவு பெற்று வினைத் திறனுடன் கடமையாற்றுகின்ற அதிபர், ஆசிரியர்கள், புலமைப் பரிசில பெற்று வெளிநாடு சென்று வந்த அதிபர், ஆசிரியர்கள், மாகாண மட்ட, தேசியமட்ட போட்டிகளில் பரிசில்களைப் பெற்ற ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட வுள்ளனர், (10)

# உணவில்லாத நிவாரணப் பொருட்கள் 500 குடும்பங்களுக்கு வழங்க ஏற்பாடு

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேச செயலர்பிரிவில 100 குடும்பங்களுக்கு உணவில்லாத பொருட்களை யு.என்.ஏச்.சி.ஆர்.நிதியுதவியுடன் பாஜ் நிறுவன அனுசரணையில் துணுக்காய்ப் பிரதேச செயலகத்தினால் கடந்த 27ஆம் திகதி வழங்கப்பட்டது.

இதில் தமிழ் நாட்டிற்கு புலம் பெயர்ந்து மீளவும் தங்களின் வாழ்விடங்களுக்கு திரும்பியவர்களுக்கும் இடம் பெயர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு கூரை விரிப்பு, தண்ணீா குடங்கள் ,படுக்கை விரிப்பு போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன என்றும் மிகவும் கஷ்ரப்பட்ட 500 குடும்பங்களுக்கு அந்தந்தக் கிராம சேவையாளர்கள் மூலம் விபரங்கள் சேகரிக்கப்பட்டு மிக விரைவில் பொருட்கள் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன..(24)



வட்டக்கச்சி நாவலர் வீதிப்பகுதியில் இருந்து பத்துவீட்டுத்திட்ட சந்திவரையிலான வீதி நியாப் திட்டத்தினரால் புனரமைக்கப்படுகிறது. மற்றும் வீதியின் அருகே உள்ள பெரிய மரங்கள் கனரக வாகனம் மூலம் அகழப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்-ரூபன்)

# அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் 08ஆம் திகதி திருகோணமலை செல்கின்றார்

(திருமலை)

சிறிலங்கா அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜெயந்த தனபால இம் மாதம் 8 ஆம் திகதி திருகோணமலைக்குச் செல்லவிருக்கின்றார். காலை 10 மணிக்கு திருகோணமலை மாவட்டத்தின் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உள்ளூர் உறுப்பினர்களையும் வெளிநாட்டு போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களையும் டாக்டர் ஜெயந்த தனபால சந்திப்பார் என்றும் இச்சந்திப்பு திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெறும் என்றும் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. பிற்பகல் 2.00 மணியளவில் அரச சார்பற்ற நிறுவனங்கள், சமயஸ்தாபனங்கள், சமூக அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் உள்ளூரில் உள்ள முக்கிய பிரமுகர்களையும் டாக்டர் ஜெயந்த தனபால சந்திப்பார். இச்சந்திப்பு உப்புவெளியில் உள்ள மாகாண சபை விருந்தினர் விடுதியில் நடைபெறும். (25)

# இராணுவச் சமநிலை - யுத்த நிறுத்தம்

# அரசியல் சமநிலை - பேச்சுவார்த்தை

**இராணுவ மேலாதிக்கச் சிந்தனை சிதைவடையும்போது இராணுவச் சமநிலையும் அதனைத் தொடர்ந்து யுத்த நிறுத்தமும் சாத்தியமானதாகின்றது. அரசியலில் மேலாண்மை செலுத்த முனையும் தீவிர அடிப்படைவாதிகள் தோல்வி அடையும் போது அரசியல் சமநிலையும் அதனைத் தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் வாய்ப்பு உருவாக முடியும்.**

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்பட்ட வேளையில் நிச்சயமாக இருதரப்பினருக்கும் இடையில் ஓர் இராணுவச் சமநிலை இருந்திருத்தல் வேண்டும். அவ்வாறானதொரு இராணுவச் சமநிலை இல்லாது போனால் யுத்த நிறுத்தம் என்பது சாத்தியப்பாடான தொன்றாக இருந்திருக்க வாய்ப்பில்லை.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் நடத்திய பாரிய யுத்தத்தில் அதனால் வெற்றி பெறமுடியவில்லை என்பது மட்டுமல்ல. வடக்கில் இராணுவத்தினரின் இருப்புக்குறித்த கேள்வியையும் எழ வைத்தது. இதனைத் தொடர்ந்தே சிறிலங்கா அரசாங்கத்தரப்பு யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை என்பது குறித்துப் பிரஸ்தாபிக்கத் தொடங்கியது.

அதிலும் குறிப்பாகத் "தீச்சுவாலை" நடவடிக்கையின் தோல்வியும், கட்டுநாயக்க, விமானப் படைத்தளத்தின் மீதான தாக்குதலையும் அடுத்து, சிறிலங்கா அரசின் ஆயுதப்படையின் மேலாண்மை என்ற எண்ணப்பாடு சிதைவிற்குள்ளானது. இதனைத் தொடர்ந்தே அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றியும், சர்வதேச மத்தியஸ்துவம் பற்றியும் எண்ணத் தலைப்பட்டது.

இதற்கு முன்னர் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டாலே பேச்சுவார்த்தை, விடுதலைப்புலிகள் தமிழீழக் கோரிக்கைகளைக் கைவிட்டாலே பேச்சுவார்த்தை எனச் சனாதிபதி சந்திரிகா உட்பட ஆட்சியில் பங்கேற்ற அனைவரும் கூறினர். இதில் அன்றைய பிரதிப்பாதுகாப்பமைச்சர் அனுருத்தரத்வத்த, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க போன்றவர்கள் மிகவும் தீவிரம் காட்டுபவர்களாக இருந்தனர்.

ஆனால், யுத்த கள முனையானது சிறிலங்கா ஆட்சியாளரின் மன உணர்வுகளுக்கு ஏற்பச் சாதகமானதாக இருக்கவில்லை. யுத்தத்தைத் தொடரின் பாதகமான விளைவுகளே ஏற்படும் என்ற நிலையில், அரசாங்கம் யுத்தத்தை முன்னெடுக்க முடியாததொரு நிலையில் இருந்தது. இந்நிலையில் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தித் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சி அதிகாரத்திற்கு வந்த ஐ.தே. முன்னணி அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு வந்தது.

ஐ.தே முன்னணி, அரசாங்கத்தைக் கைப்பற்றியபோதும் விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செய்த போதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக தமிழ் மக்களுக்கு எதிரான பெரும் யுத்தத்தை நடத்திய சந்திரிகா குமாரதுங்கவே இருந்தார்.

அன்றைய சூழ்நிலையில் அவரால் மீண்டும் ஒரு யுத்தப் பிரகடனத்தையோ, யுத்த நிறுத்தத்தை முறித்துக்கொள்ளும் வகையிலான அறிவிப்பு எதனையுமே வெளியிடமுடியவில்லை.

இவ்வாறாக, இராணுவச் சமநிலை எவ்வாறு யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கும் அமுலாக்கத்திற்கும் அவசியமோ அதே அளவு அரசியல் ரீதியிலான சமநிலை சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கும், தொடர்வதற்கும் அவசியமானதாகும். இச்சமநிலை உருவாகாத வரையில் சமாதானப் பேச்சுவார்த்தை என்பதோ தீர்வுகள் என்பதோ சாத்தியப்பாடானதாக இருக்க வாய்ப்பில்லை.

விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தத்தைச் செய்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐ.தே முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் அரசியல் ரீதியிலானதொரு சமநிலையைத் தோற்றுவிக்க ஓரளவு முற்பட்டது என்றே கூறலாம். அதாவது விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை .மேசையில் சமதரப்பாக ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்த முற்பட்டது. இதன் காரணமாகவே விடுதலைப்புலிகளுக்கும்-சிறிலங்கா அரசிற்கும் இடையில் வெளிநாடுகளில் ஆறுசுற்றுப்பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் விடுதலைப்புலிகளைச் சமநிலையில் வைத்து அதாவது அரசியல் சமநிலையுடையவர்கள் என்ற நிலையில் வைத்துப் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. இதற்குச் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான கூட்டணி அரசாங்கத்திலும், அவர்கள் ஆதரவு தேட முனையும் கட்சிகளிடமும் ஆதரவு இல்லாமல் இருப்பதும் அவர்களுக்கு இடையில் இணக்கப்பாடு ஒன்று ஏற்படாமல் இருப்பதுமே காரணமாக இருக்கலாம்.

அரசியல் சமநிலையைப் பேண முற்படும் அரசாங்கத்திற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியமானதாகும். ஆனால், தற்பொழுது ஆட்சியிலுள்ள ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்திடம் அத்தகையதொரு ஸ்திரத் தன்மை இருப்பதாக இல்லை.

ஆட்சி அமைத்து ஐந்து மாதங்கள் மேற்கொண்ட முயற்சியின் பின்னரே பாராளுமன்றத்தில் அரசாங்கத்தினால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடிந்துள்ளது. இதுகூட கொள்கை அடிப்படையிலான இணக்கப்பாடல்ல. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல், பதவி சுகங்களை அனுபவித்தல் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடே ஆகும்.

இது ஆட்சி அதிகாரத்தில் முக்கிய பங்கேற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் கூடப் பொருந்தக் கூடியதே. இவ்விரு கட்சிகளுக்கும் தேர்தலின் முன் செய்து கொண்ட உடன்பாட்டில் கூட இது தரப்பும் இணக்கம் காணப்படாத விடயங்கள் உண்டு. அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினை விடயத்தில் இவ் இணக்கப்பாடு ஏற்பட்டதாக இல்லை.

இந்நிலையில், தமிழர் தரப்பை சமநிலையில் கூடியதான பேச்சுவார்த்தைக்கு அழைத்தல் என்பது சனாதிபதி சந்திரிகாவிற்கோ, அவரது அரசாங்கத்திற்கோ சாத்தியமான தொன்றாக இல்லை. ஏனெனில், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துதல் என்பதை அரசாங்கத்தில் உள்ள ஒரு தரப்பினர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இவர்கள் அரசின் ஸ்திரத்தன்மையைக் குறைத்துவிடும் அளவிற்குச் சவால்விடும் பலம் பெற்றவர்களாக இருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளுடன் அரசியல் ரீதியில் சமநிலை ஏற்படவேண்டுமானால் முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் பௌத்த-சிங்களவர்களுடன் சமான உரிமையுடையவர்கள் என்பதைச் சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்வதன் மூலமே சாத்தியமாகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை. தமிழ் மக்களை இரண்டாம் தரப்பினர்கள் என்ற நிலையில் வைத்தே நோக்குகின்றனர். சுருக்கமாகக் கூறுவதானால் தமிழ் மக்களின் உரிமைகளைப் பகிர்ந்தளிக்கவோ தமிழ் மக்களை சமஅந்தஸ்துடன் கௌரவமாக நடத்தவோ அவர்கள் தயாராகவில்லை. மாறாகச் சில சலுகை மட்டுமே வழங்குவதற்கே அவர்கள் தயாராகவுள்ளனர்.

அடுத்ததாக இவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என தமிழ் மக்களிடம் அங்கீகாரம் பெற்றுள்ள விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும் தயாராகவில்லை. ஏனெனில் விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதென்பது தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை உறுதியானதாகவும், ஸ்திரத்தன்மையானதாகவும் ஆக்கிவிடும் என அவர்கள் கருதுகின்றனர்.

ஏனெனில் விடுதலைப்புலிகள் ஏற்கனவே இராணுவ ரீதியிலான சமநிலைகளைத் தனித்தரப்பாக நின்றே பெற்றுக் கொண்டுள்ளனர். இந்நிலையில் அரசியல் சமநிலையையும் தனித்தரப்பாக நின்று- அதாவது ஒரு தலைமைத்துவத்தின் கீழ் தமிழர்கள் பெற்றுக் கொள்வார்களேயானால் அவர்களின் அரசியல் நிலைப்பாடு உறுதியாகிவிடும் என்பதே அவர்களின் நம்பிக்கையாகும்.

அதாவது அரசியல்-இராணுவ ரீதியிலான உறுதியான இருப்பு தனியாட்சிக்கு இட்டுச்செல்வதாகும் என அவர்கள் நம்புகின்றனர்.

இந்நிலையில் தான் தன்னாட்சி இடைக்கால நிர்வாக சபை என்பது குறித்துப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத் தரப்பு பின்னடிப்புக்களைச் செய்வதாகவுள்ளது. ஏற்கனவே ஐ.தே.முன்னணி அரசியல் ரீதியில் எட்ட முனைந்த அரசியல் சமநிலையை குழப்பத்திற்கு உள்ளாக்க முனைந்துள்ளது.

ஆனால் அரசியல்சமநிலை ஒன்றை உருவாக்காது அரசாங்கம் இழுத்தடிப்புச் செய்யும் பட்சத்தில் இராணுவ மாற்றத்திற்குள்ளாகிவிட்டதெனவும், சமநிலை பாதிப்பிற்குள்ளானது தவிர்க்க முடியாத தொன்றாகவே இருக்கும். சிலவேளை அரசாங்கத் தரப்பு இராணுவ ரீதியிலான சமநிலையில் தமது கைமேலோங்கி விட்டதொரு உணர்வு நிலைக்கு வருகையிலும் அது அரசியல் ரீதியிலான சமநிலை குறித்து-அதாவது பேச்சுவார்த்தை குறித்து அக்கறையற்ற போக்கைக் கொள்ளுதல் கூடும்.

இத்தகையதொரு உணர்வு நிலைக்கு அரசாங்கம் வருவதற்கான ஒரு ஏது நிலையும் இல்லாமல் இல்லை. ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவின் அண்மைய பேச்சுக்கள் மீண்டும் ஒரு யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படினும் சர்வதேசத்தின் ஆதரவினைப் பெற்றுக்கொண்டு விடலாம் என கருதுவது போன்றுள்ளது.

குறிப்பாக அமெரிக்கா, இந்தியா போன்றவற்றிடம் இருந்து பெருமளவிலான இராணுவ உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். இவ்விரு நாடுகளிலும் இருந்து கடந்த இரண்டு ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற பாதுகாப்பு மற்றும் பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்பும் அவருக்கு இந்நம்பிக்கை கொடுத்திருக்கலாம்.

இந்நிலையில் விடுதலைப்புலிகளுடன் அரசியல் ரீதியிலான சமநிலை பேணுதல் என்பதும்-சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல் என்பதும் அவருக்கு அவசியமற்ற தொன்றாகப் பட்டிருக்கலாம். அவ்வாறு இல்லாது விடில் சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருத்தல் - தயாராகவிருந்திருத்தல் வேண்டும்.

விடுதலைப்புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுவார்த்தைகளை சனாதிபதி சந்திரிகா தொடங்காமைக்கு ஜே.வி.பி யின் எதிர்ப்புக் காரணம் என பலமானதொரு அபிப்பிராயமும் உண்டு. ஆனால், அது எந்தளவிற்கு யதார்த்தபூர்வமானது என்பது குறித்துக் கேள்விகளும் இல்லாமல் இல்லை.

ஏனெனில் ஜே.வி.பி தனது வாக்குறுதிகளைப் பலப்படுத்திக்கொள்வதற்காக கையில் எடுத்த முக்கியமான பிரச்சினை விலைவாசி ஏற்றமும் சம்பளம் அதிகரிக்கப்படாமையுமே. ஆனால் தற்பொழுது இவை இரண்டும் பூதாகரமான பிரச்சினையாக மாற்றம் கண்டுள்ளது. ஆனால் இன்று அரசாங்கத்தில் இடம் பிடித்துக்கொண்டுள்ள ஜே.வி.பி அதனைக் கண்டு கொள்வதாக இல்லை. தொடர்ச்சியாக மௌனம் சாதிப்பதாகவே இருந்து வருகின்றது.

இந்நிலையில் இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தில் மட்டும் எதிர்ப்புத் தெரிவித்து கூட்டணியை விட்டு வெளியேறிவிடும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும். சிறிலங்காவின் அரசியலைச் சில வேளை பாணும், அரிசியும் சிலவேளைகளில் இனப்பிரச்சினையும் தீர்மானித்துவந்துள்ளன.

ஆனால் எவ்வேளையிலும் பாணும், அரிசியுமே இனவாதத்தைவிட ஆட்சியாளர்களுக்குப் பெரும் தோல்வியைக் கொடுத்துள்ளது.. சிறிலங்கா அரசால் 1970-1977ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சிறிமாவோ தலைமையிலான அரசாங்கம் மக்களை வாட்டி எடுத்தமையினாலேயே அது அரசியலில் நீண்டதொரு அஞ்ஞானவாசம் செய்ய வேண்டி வந்தது. இது ஜே.வி.பிக்கு விளங்காது போனாலும் பண்டாரநாயக்க குடும்ப வாரிசுக்கு விளங்காமல் இருக்கமுடியாது

ஆகையினால் ஜே.வி.பியின் அச்சுறுத்தலையும் மீறிச் சனாதிபதி சந்திரிகா விரும்பின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும். ஆனால் விடுதலைப் புலிகளுடன் அரசியல் சமநிலை ஒன்று எட்டப்படுவதை அவரும் விரும்புவதாகத் தெரியவில்லை. மாறாக இராணுவச் சமநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் யுத்தத்தைப் நோக்கிச் செல்லவே அவர் விரும்புகின்றார்.

அவ்வாறு இல்லாது விடில் ஈ.பி.டி.பி போன்ற தேசவிரோதக் குழுக்களையும் கருணா போன்ற இனவிரோதச் சக்திகளையும் பயன்படுத்தி அரசியற் சமநிலையையும், இராணுவச் சமநிலையையும் அவர் குழப்பத்திற்குள்ளாக்க விரும்பமாட்டார். அத்தோடு சமாதான முயற்சிகளை இழுத்தடிக்கும் வகையில் தேசிய நல்லிணக்க ஆலோசனைக்குழு போன்றவற்றை உருவாக்கி காலத்தை இழுத்தடிப்புச் செய்ய வழிவகை தேடமாட்டார்.

ஆனால் சனாதிபதியின் நோக்கம் எதுவாக இருப்பினும் அரசியல் சமநிலை ஒன்று ஏற்படும் வகையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு குறித்த முயற்சியில் முன்னேற்றம் எதுவும் ஏற்படமாட்டாது என்பது வெளிப்படையானது. ஆகையால் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்று எட்டப்படவேண்டுமானால் இராணுவச் சமநிலையை ஒத்ததான அரசியல் சமநிலை ஒன்றும் அவசியமாகியுள்ளது. இது தீவிர அடிப்படை வாதிகள் அரசியல் தோல்வி அடையும்போதே சாத்தியமானதாகும்.

□□

ஜெயராஜ்

# "பொடோ" நீக்கம் வெறும் மாயை!

இந்திய அரசியலில் மாற்றங்கள் என்பது சாதாரண விடயம் தான்! அவை சட்டங்கள் தொடக்கம் சலுகைகள் வரை தொடர் கதையாகத்தான் இருந்து வருகின்றது. இந்த வகையில் மத்தியிலோ, மாநிலத்திலோ ஆட்சி மாறும்போது ஆளும் கட்சி வந்த வேகத்தில் மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தப் பின்நிற்பதில்லை.

இந்த நிலையில்தான் மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி பொடோ சட்டத்தை திரும்பப் பெற்றதன் மூலம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

பொடோ சட்டத்தை திரும்பப் பெறும் அவசர சட்டத்தை சனாதிபதி அப்துல் கலாம் அங்கீகரித்து வெளியிட்டுள்ளார். ஆகா... பொடோ சட்டம் போய்விட்டது என்றெல்லாம் பெருமூச்சு விட்டுவிடலாம் என்றால் அதுதான் இல்லை.

ஏனெனில் பொடோ சட்டத்திற்குப் பதிலாக சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்க மத்தியரசு 1967 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தில் சில, பல திருத்தங்களுடன் அறிமுகப்படுத்தவுள்ளது. அதற்கான புதிய பெயர் சூட்டுப்படலம்தான் இன்னும் முடியவில்லை. வெகு விரைவில் புதிய சட்டம் அவதார்ம் எடுக்கும். மொத்தத்தில் "கத்தி போய் வாள் வந்த கதைதான்" இது.

பொடோ சட்டம் வாஜ்பாய் அரசின் காலத்தில்தான் வெளிவந்தது. அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த தி.மு.க கருணாநிதிதான். தமிழக நலன்கருதி பொடோ சட்டத்தைக் கொண்டு வருவதாகக் கூறிக்கொண்டார்.

ஆனால் பொடோ சட்டத்தை கருணாநிதி பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் இன்றியே போனது எனலாம். ஏனெனில் அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் அவரது ஆட்சி பறிபோனதே முக்கிய காரணமாகும்.

இதேவேளை பொடோ சட்டத்தை மாநில அரசுகள் தமக்கு சார்பாக, ஏற்ற விதத்தில் வளைத்துக் கொண்டன. மக்களுக்காக குரல்கொடுத்த அமைச்சர்கள், மந்திரிகள் பொடோவில் தள்ளப்பட்டனர்.

அது மட்டுமா.... எந்த மக்களால் முதலமைச்சர் கதிரைக்கு வந்தார்களோ அதே மக்களையே பொடோவில் தள்ளிய கொடூரமும் மாநிலங்களில் தலைவிரித்தாடியது.

பாடசாலை மாணவன் முதல் பத்திரிகையாசிரியர் வரை மாநிலங்களில் எடுத்ததற்கெல்லாம் எங்கும் எதிலும் பொடோ தான் பாய்ந்தது.

பொடோ சட்டத்தை மாநில அரசுகள் தவறாக பயன்படுத்துவதை மத்தியரசு கண்மூடி, வாய்பொத்தி மௌனமாக அங்கீகரித்தது. துணைப்பிரதமர் அத்வானியோ ஒரு படி மேலே போய் மாநில அரசின் நடவடிக்கையில் மத்தியரசு தலையிடமுடியாது என்று மாநில அரசுகளுக்காக வக்காளத்தும் வாங்கினார்.

குறிப்பாக தமிழகத்தில் பொடோ சட்டம் அரசியல் காரணங்களுக்காகவே ஆளும் கட்சியால் கையாளப்பட்டது. விட்டால் தன்மீது கூட பொடோ சட்டம் பாயும் என்று திகைத்த கருணாநிதிதான், தமிழக எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து பொடோ சட்டத்தை திரும்பப் பெறுமாறு மத்தியரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணியோ "செவிடன் காதில் ஊதிய சங்காய்" இருந்து விட்டது.

இதனை எதிர்கால மக்களவைத் தேர்தலில் பயன்படுத்திக் கொள்ள காங்கிரஸ் கட்சி முனைப்புக் காட்டியது.

பொடோ சட்டம் திரும்பப் பெறப்படும் எனும் தூண்டிலை வீசியே கூட்டணிக்கு கட்சிகளை இழுத்தது. ஏற்கனவே பொடோ பீதியிலிருந்த திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம், பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்டவை சந்தர்ப்பம் இது தான் என்று பாரதிய ஜனதாவை விட்டுப் பிரிந்தன. காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்தன.

அந்த வகையில் பொடோ சட்டம் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றது என்று தான் மத்தியரசு பிறரை நம்ப வைத்துள்ளது.

உண்மையில் பொடோ சட்டம் தான் பலதிருத்தங்களுடன் வேறு பெயரில் "பழைய கள் புதிய மொந்தையில்" வரவிருக்கின்றது. இந்த புதிய சட்டத்தினை சனாதிபதி அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய சட்டத்தின் பிரகாரம் பாரதிய ஜனதா தடைவிதித்திருக்கும் 32 தீவிரவாத அமைப்புக்களுக்கும் வரவிருக்கும் புதிய சட்டமும் தடை விதித்துள்ளது.

அத்துடன் பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட எவரும் உடனடியாக விடுதலையாகப் போவதில்லை. சட்டப் படி தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவும் உள்ளது என்பதும் கவனிக்கத்தக்கதோர் விடயம்.

அப்படி என்றால் பொடோ சட்டம் போய்விட்டதாக எப்படிக் கொள்ள முடியும்....? பொடோ சட்டம் வாபஸ் பெறப்படுவதே, அது தவறாக மாநிலங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனால் தான் என்று மத்தியரசு கூறிக் கொள்கின்றது.

எனவே பொடோவில் சிறையிலிருப்பவர்கள் அனைவரும் மாநில அரசுகளால் தவறான முறையில் கைது செய்யப்பட்டவர்கள் என்று தான் பொருள் கொள்ள முடியும்.

அப்படி எனில், பொடோவில் இருப்பவர்களை ஏன் உடனடியாக மத்தியரசு விடுதலை செய்ய முன்வரவில்லை, விசாரணை நடத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்படும் என்று கூறிக்கொள்கின்றது.

இதை வைத்துப் பார்க்கையில் பொடோ சட்டம் வாபஸ் பெறப்பட்டதன் அர்த்தம் தான் என்ன.... எனும் வினாதான் மேலோங்கி நிற்கின்றது.

இது மட்டுமன்றி பொடோ வழக்கு விசாரணைகளை பொடோ மறு ஆய்வுக்குழுவே மேற்கொண்டு தீர்ப்பளிக்குமென்று கூறப்படுகின்றது.

பொடோ மறு ஆய்வுக் குழுவின் தீர்ப்பினை மாநில அரசுகள் ஏற்காத பட்சத்தில் வழக்குகள் இழுத்தடிக்கப் படலாம்...?

எனவே பொடோ சட்டம் வாபஸ் என்று மத்தியரசு அறிவித்திருந்தாலும் கூட பொடோ சட்டம் வலுவிழந்து போனதாகக் கூற முடியவில்லை. அதாவது மத்தியரசு தன்னளவில் பொடோவைக் கைவிட்டுவிடத் தயாரில்லை என்று தான் நம்பத் தோன்றுகின்றது.

ஏனெனில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலங்களிலெல்லாம் மிகவும் கடுமையான சட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருப்பதை மறுத்து விடவும் முடியாது.

1874 இல் ஆங்கிலேயரால் தடுப்புக் காவல் சட்டம், ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது உண்மையில் இந்தச் சட்டங்களைப் பின்பற்றிதான் ஆளும் காங்கிரஸ் பலவிதமான சட்டங்களைக் கொண்டு வந்ததென்னமோ உண்மை தான்.

இதனை அடியொற்றியே காங்கிரஸ் ஆட்சிப் பீடமேறியதும் 1962 இல் "இந்தியப் பாதுகாப்புச் சட்டம்" கொண்டு வந்தது. இதே போல் 1971 இல் இந்திரா காந்தி பிரதமராக இருந்தார். உள்நாட்டில் பாதுகாப்புக் கருதியும், அவசர நிலை கருதியும் "மிசா சட்டம்" கொண்டு வந்தார்.

உள்நாட்டு பாதுகாப்பு என்பது இந்திரா காந்தியைப் பொறுத்தவரை எதிர்க்கட்சிகளின் போர்க் கொடி தூக்கலில் இருந்து விடுபடுவது என்பதாகத் தான் பொருள் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் மிசா சட்டத்தில் கைதானவர்கள் அனைவரும் தமிழக தி.மு.க. வினரே. மறைந்த முரசொலிமாறன், ஸ்டாலின், வைகோ, கண்ணப்பன், டி.ஆர்.பாலு உள்ளிட்ட நூற்றுக் கணக்கானவர்கள் மிசா சட்டத்தின் கீழ்த் தான் கைது செய்யப்பட்டனர். தி.மு.க. தொண்டர்கள் 25 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டதும் மிசா சட்டத்தின் கீழ்தான்!

1980 இல் தேசியப் பாதுகாப்புச் சட்டம் எனும் சட்டத்தை இந்திராகாந்தி கொண்டு வந்தார். அதாவது சீக்கியர்களுக்கு எதிராகவே இச்சட்டம் கொண்டு வரப்பட்டது என்று தான் கூறவேண்டும். ஆனால் அதே சீக்கியர்களினால்தான் இந்திரா காந்தி 1984இல் சுட்டுக்கொல்லப் பட்டார்.

இந்திராகாந்தியின் மரணத்தையடுத்து ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவியேற்றார்.பஞ்சாப்பில் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கென்று பிரதமர் ராஜிவ் காந்தி 1985 இல் இரண்டாண்டுகள் மட்டுமே என்று (Terorist And Disruptive Activities Act-TADA) 'தடாசட்டம்' கொண்டு வந்தார் மக்களவையில் நான்கு மணிநேர விவாதத்தில் 18பேர் மட்டுமே பங்கெடுத்து ஆமோதித்தே இந்த தடா சட்டம் கொண்டுவரப்பட்டது.

இரண்டு வருடங்கள் என்று கொண்டு வரப்பட்ட தடாசட்டம் 1995வரை கோர தாண்டவம் ஆடியது. பஞ்சாப், ஒரிஸா மாநிலங்களில் 10ஆண்டுகளிலும், 65 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டனர். 4அல்லது 5ஆண்டுகள் விசாரணை நடத்தப்பட்டது. இறுதியில் 450பேரே குற்றவாளிகளாக இனங் காணப்பட்டதாக மத்தியரசு கூறிக் கொண்டது. ஆக மொத்தம் தடா சட்டம் நிரபராதிகளையும், அப் பாவிகளையும் தான் கூடுதலாக பதம் பார்த்தது. என்றுதான் கூறவேண்டி யுள்ளது. மனித உரிமை அமைப்புக்களின் போராட்டங்களையடுத்தே 1995 இல் தடாசட்டம் ரத்துச் செய்யப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கது.

இதனையடுத்து 1999 ஒக்டோபரில் வாஜ்பாய் பிரதமராகப் பதவியேற்றார். தி.மு.க,ம.தி.மு.க. பா.ம.க என்பன தேசிய சனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்தன அப்போது.

இதன்போது தான் தமிழக முதலமைச்சராக இருந்த கருணாநிதி தமிழகத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (Prevents of treroism ordinece - Poto) பொடோ சட்டத்தைக் கொண்டு வந்தார்.

உண்மையில் அப்போது ஆட்சி கலைக்கப்படும் எனும் பீதியில் இருந்த கருணாநிதி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே தீவிரவாதத்திற்கு எதிராக நாங்கள் செயற்படுகின்றோம் என்று காட்டிக்கொள்ளவே பொடோசட்டம் கொண்டுவந்தார் என்று ஆய்வாளர்கள் இன்றும் கருத்துக் கூறுகின்றனர்.

ஏனெனில் தடா சட்டத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய கருணாநிதியே ஏன் தடாவை அடியொற்றிப் பொடோவைக் கொண்டுவர வேண்டும்......?

தடாசட்டத்தை விடவும் மிகவும் மோசமான, ஆபத்தான சட்டமாகவே பொடோசட்டப் பண்புகள் அமைந்திருந்தன.

* தடாவில் குறைந்த பட்ச அபராதம். பொடோவில் 10 இலட்சம் வரை அபராதம் விதிக்க முடியும்.

* தடாவில் 15 நாட்களுக்கு ஒரு முறை நீதிமன்ற விசாரணை பொடோவிலோ 60 நாட்களுக்கு ஒருமுறையே விசாரணை.

* காவலில் பெறப்படும் வாக்கு மூலம் தடாவில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பொடோவில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆக.....காவலில் இருக்கும் ஒரு நிரபராதியைக் சித்திரவதை செய்து கூட வாக்குமூலம் பெற்று குற்றவாளியாக்க முடியும் என்பதுதான் பொடோ சட்டத்தின் சுருக்கம் என்றால் அது மிகையில்லை போலுள்ளது.

தி.மு.க தலைவர் கருணாநிதி தானே அமுல்படுத்திய அந்தச் சட்டத்தைத் தானே திரும்பப்பெறுமாறு அவலக் குரல் கொடுக்க நேரிடும் என்று அன்று நினைத்திருந்தால் பொடோசட்ட மசோதாவை மாநிலத்தில் அமுல்படுத்தியிருப்பாரா? என்பது சந்தேகம் தான்.

இதேவேளை இம்மாதம் ஒக்ரோபருடன் பொடோசட்டம் வலுவிழந்து போகின்றது. ஆனால் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியோ வலிந்து சென்று பொடோசட்டத்தை வலுவிழக்க விடாது, தாமே திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளதாகக் காட்டிக் கொள்கிறது. ஏன்....?.

கூட்டணிக் கட்சிகளை திருப்திப் படுத்தும் நோக்கில் பொடோவை திரும்பப் பெற்றுக்கொண்டதாக ஒரு மாயா ஜாலம் தான் காட்டிக




கொண்டிருக்கின்றது ஐக்கிய முற்போக்குக்கூட்டணி.

மாறாக 1967 இல் தமது ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டத்தைத் திருத்தங்களுடன் அமுல் படுத்தவுள்ளது. இந்தச் சட்ட த்தை சனாதிபதியும் அங்கீகரித்து விட்டார்.

1967இன் சட்டப்பிரகாரம் மாநில அரசோ,மத்தியரசோ சந்தேகிக்கும் நபரை விசாரணைகள் எதுவுமின்றி உடனடியாகக் கைது செய்யமுடியும்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பொலிசார் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளமாட்டார். மாறாக கைதுசெய்

**அ.கலைவாணி**

யப்பட்டவர் தான் தன்னை நிரபராதி என்று நிரூபிக்க வேண்டும். தவறின் அவருக்கு மரணதண்டனை கூட வழங்கப்படும்

இத்தகைய சட்டத்தையே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு திருத்தங்களுடன் கொண்டுவருவதாகக் கூறியுள்ளது.

மத்தியரசு திருத்தங்கள் என்பதன் மூலம் சட்டத்தை இன்னும் கடுமையாக்கவுள்ளதா...... என்பதும் சந்தேகமே.

ஏனெனில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தான் மிகவும் கடுமை யான சட்டங்கள் கொண்டுவரப்பட்டது கண்கூடு

எனவே அரசியல் சதுரங்கத்தில் "சட்டங்கள் மாறுவதில்லை அதன் வடிவங்கள் தான் மாறுகின்றன" என்பதே உண்மை!.

# போதைக்கு அடிமையாகி வாழ்வை இழக்காதீர்



இன்று மனிதர்களில் சிலர் மது என்னும் உயிர் கொல்லிக்கு முழுநேர அடிமையாக செத்துச் செத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பது அனை வராலுமே ஜீரணிக்க முடியாத ஒரு சோக மாகும். ஆனால் இன்று மது ஒழிப்புதினம். இது வெறும் பகட்டுப் பேச்சாகவே பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இதற்கு எமது நாட்டில், எமது பிரதேசத்தில் உதாரணங்கள் இருக்கின்றன என்று கூறுவதை விடவும் முழுவதுமாகவே மது விற்கு அடிமையானவர்களே உள்ர் என்று தான் கூறமுடியும். ஏனெனில் சிறுவர் முதல் முதியவர் வரை இந்த மது என்னும் ஒரு உயிர்கொல்லிக்கு அடிமையாகியுள்ளனர் எனில் மறுக்கவும் முடியாது.

நம் நாட்டு இளைஞர்களின் உயிர் குடிக்கவும். நிழல் வியாபாரிகள் தம் பை நிறைக்கவும் காரணமாக இருப்பது மது. இதனை உற்பத்திசெய்து விற்பனை செய்பவர்கள் எத்தனை பேர் உள்ர். பாமரர்

**அ.பிரியா**

முதல் பட்டம் பெற்றவர்வரை எதிர்கால தலைமுறைகூட இதனைக் கையாள்கின்றது 'குடிகுடியைக் கெடுக்கும்' என்பது எமது முன்னோர் கூறிய முதுமொழியாகும். இது அனைவராலும் உச்சரிக்கப்படுவது. இந்த மது என்னும் போதைக்கு அடிமையாகி எத்தனை குடிகள் குட்டிச்சுவராகிப்போயுள் ளன? அது மட்டுமா? எத்தனை கொடு மைகள் இடம்பெறுகின்றன? எத்தனை உயிர்கள் பலியாகிப் போகின்றன என்பதை இவர்கள் யாருமே சற்றும் உணர்ந்து பார்ப்பதில்லையே ஏன்?

"மதுவில் செலவிடப்படும் பணம் இரு மடங்கு நட்டத்தை ஏற்படுத்தும். ஏனெனில் நீ பணத்தையும் புகழையும் ஆரோக்கி யத்தையும் இழக்கின்றாய்" என்று நாம் கூறவில்லை, அன்று அகிம்சைவாதியான மகாத்மாகாந்தி. கூறியது. இன்று எத்தனை ஆண்டுகளுக்குமுன் இத்தகைய அறிவுரைகளை எடுத்துச்சொல்லியும் இன்றும் எம் சமுதாயம் சீரடையவில்லை. மாறாக சீர்கெட்டுப்போயுள்ளது.

இன்று வீதி விபத்துக்கள் எம் நாட்டில் அதிகரித்து வருகின்றன. இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. மக்கள் தொகை அதிகரிக்கும்போது போக்குவரத் துக்கள் அதிகரிக்க வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதால் விபத்து ஏற்படுகின்றது என்று சொல்வர்கள். ஆனால் இவற்றில் அரைவாசிக்கும் மேலாக அடிமையானவர்களுக்கு சிறு தேன்துளிபோல் தோன்றும் மது என்னும் போதையை குடித்துவிட்டு தம் நிலை தெரியாது கண்களை மூடிக்கொண்டு வாகனங்களைச் செலுத்துவதனால் எத் தனை உயிர்கள் எம்கண் முன்னே பலியா கிய அந்தப் பரிதாபத்தை யாரும் உணர மாட்டார்களோ? அத்துடன் மது போதையில் செல்வோருமே பலியாகின்றமையை பல சம்பவங்களில் காணலாம். இதனைவிடவும் ஏன் இன்று பாடசாலைமாணவர்கள் கூட தம் சுயநினைவுகளை இழக்கின்றார்கள். இதற்குக் காரணம் இந்த மது போதையே. போதை என்பது ஒரு நோய் போன்றது.

## இன்று சர்வதேச மது ஒழிப்பு தினம்

ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் அதில் வாழும் தந்தை மதுவைப் பாவிப் பதனால் அவரது எதிர்காலம் மட்டுமல்ல அவரது ஒவ்வொரு குழந்தையினதும் எதிர்காலமும் பாதிக்கப்படுகின்றது. இதனால் மனிதனுக்குரிய வாழ்க்கையின் பாதிவடிவமே கிடைக்கின்றது. தன்வினை காரணமாக அவரது வாழ்வு பறிக்கப் படுகின்றது. இவ்வாறு பல அறிவுரைகள் எடுத்துக்கூறப்படுகின்றது. இதற்கு காரணம் மது மனிதனை ஆட்டிப்படைக்கும் கொடிய நோய் வாய்ப் புற்றுநோய் இந் நோய் வந்துவிட்டால் மரணம் வந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இதனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் நடத்தப்பட்ட ஆய்வொன் றிலே வாய்ப் புற்று நோய்க்கு மதுவும் புகை யுமே பெரும் காரணம் என்று தெரிய வந்திருக் கின்றது. தொடர் சியாகப் புகைப்பிடிக்கும், மது அருந்தும் இளைஞர் களுக்கு வாய்ப்புற்று நோய் வருவதை இந்த ஆய்வு நிரூபித்துள்ளது. நிறையப் புகைப்பிடித்து மது அருந்துபவர்களுக்கும் அவர்கள் 40 வயதைக் கடந்த பின்னரே வாய்ப்புற்று நோய் ஏற்படுவது எதிர் பார்க்கக் கூடியதாக இருந்தாலும், 20 வயது இளைஞர்களுக்கும் வாய்ப்புற்று நோய் ஏற்படுவது ஆய்வாளர்களுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. புகையிலை யோடு கஞ்சாவைப் புகைக்கும் போது 'பெபிலோமா', வைரஸ் தூண்டப்பட்டு வாய்ப்புற்று நோய் இள வயதில் ஏற்பட வழிவகுக்கலாம் என இதற்குக் காரணம் கூறப்பட்டாலும் காரணத்தை உறுதியாகச் சொல்லவில்லை. இயற்கையான நச்சுப் பொருட்களை கரையச் செய்து இரத்தத் தினூடாக எடுத்துச் செல்லும் தன்மை மதுசாரத்துக்கு உண்டு என்பதால் புகையிலையில் காணப்படும் நச்சுத்தன்மை கொண்ட மூலகங்களை மதுவினால் கரைக்கக் கூடியதாக இருக் கின்றது. இவ்வாறு மதுவும், புகையும் கைகோர்த்துக் கொள்வதன் விளைவாகவே உருவாகும் அபாயகரமான புற்று நோயினை ஏற்படுத தும் இரசாயன மூலகங் களை உட்புற வாயில் அவர்களைத் தாக்குகின்றன.

இளவயது முதல் முதியோர் வரை மதுப்பாவனையை மேற்கொண்டு வருகின் றனர். ஆனால் அது அவர்களுக்கு சுகமா கத் தென்படுகின்றதே தவிர எத்தனை சுமைகளை தோன்றச் செய்கின்றது என்பதை மறந்து விடுகின்றனர்.

எனவே இன்றைய மது ஒழிப்பு நாளில் இவர்கள் மதுவைப் பாவிப்பதனால் ஏற்படும் தீமைகளை உணர்ந்து மற்றவர் மதிக்கும் வகையிலும் எதிர்காலத்தினை ஒளிரச் செய்யும் வகையிலும் ஒவ்வொரு மனிதனும் சிந்தித்துச் செயற்படுவானாயின் அவன் புகழுடன் உலகம் போற்ற வாழ் வான் என்பது உறுதி.

# உணவு விவசாய ஸ்தாபன உதவியில் விவசாய உள்ளீடுகள் வழங்கல்



உணவுவிவசாய ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 1369 பயனாளிகளுக்கு 2004/2005ஆம் ஆண்டு காலபோகத்திற்கான விவசாய உள்ளீடுகள் மாநில அடிப்படையில் வழங்கப்பட்டுள் ளன. இதில் 700 பயனாளிகளுக்கு நெற்செய்கைக் கும், 669பயனாளிகளுக்கு உபஉணவு செய்கைக் கும் விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இப் பயனாளிகளுக்கான செய்முறைப் பயிற்சி வகுப்புக்களும் கிராமங்கள் தோறும் கடந்த 28ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 10ஆம் திகதி இது நிறைவடையும்.

# அக்கினிப் பறவைகள் பாகம்-02 திருகோணமலையில் வெளியீடு

(திருகோணமலை)

நிதர்சன மகளிர் பிரிவின் தயாரிப்பில் உருவான "அக்கினிப் பறவைகள்" பாகம்- 02 விவரணச் சித்திரம் ஒளிநாடா வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை திருகோணமலை நகர மண்டபத் தில் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் துறை யும், நிதர்சனம் மகளிர் பிரிவும் இந்நிகழ்வை ஒழுங்கு செய்தன. இந்நிகழ்வுக்குத் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி. காருண்யா தலைமை வகித்தார். ஆரம்பத்தில் விடுதலைப்புலிகள் திருமலை நகர அரசியல் துறைப்பொறுப் பாளர் சிவகுமார் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றினார்.

பொது ஈகச்சுடரை மாவீரர் ஒருவரின் தாயார் ஏற்றினார். முத லாவது பெண் மாவீரர் இரண் டாவது லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப்படத்திற்கு திருகோண மலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஈகச்சுடரை ஏற்றி, மலர்மாலை அணிவித்தார். திருமலை மகளிர் மன்றத் தலைவி கண்மணி இரத்தினவடிவேல் வரவேற்புரை நிகழ்த்தினார். வெளியீட்டுரையை பிரமிளா (நிதர்சனம் மகளிர் பிரிவு) நிகழ்த்தினார். சிறப்புரையை வீரா நிகழ்த்தினார். மதிப்பீட்டுரை களை ராணிசீதரன், யோகானந்தம் ஆகியோர் நிகழ்த்தினர். அக்கி னிப்பறவைகள் ஒளிப்பேழையை திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் வெளியிட்டு வைத்தார். போராளி அம்புலி நன்றி தெரிவித்தார். (25)

# பாடசாலை பரிசளிப்பு விழாவில் பங்கேற்கும் மட்டு.பா.உறுப்பினருக்கு கொலைப் பயமுறுத்தல்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மட்டக்களப்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயா னந்தமூர்த்திக்கு தேசவிரோதக் கும்பலொன்றினால் தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை நடை பெறவிருக்கும் கிரான் மகா வித்தி யாலய பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளக் கூடாது என்றே இந்தக் கொலை அச்சுறுத்தலை அப்பேர் வழிகள் விடுத்துள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. அவர் ஆரம்பக் கல்வி கற்ற இப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில், பிரதம அதி தியாக கலந்து கொள்ள பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி அழைக்கப்பட்டுள்ளார். இவருடன் சிறப்பு அதிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பி னர்களான பா.அரியநேத்திரன், த.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோர் அழைக்கப் பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு மட்டும் இந்த கொலை அச்சுறுத் தல் விடுக்கப்பட்டுள்ளது.

"தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் நீ பரிசளிப்பு விழா வில் கலந்து கொண்டால் கொலை செய்யப்படுவாய்" என இந்த கொலை அச்சுறுத்தல் தனக்கு விடுக்கப்பட்டுள்ளதாக இதனை உறுதிப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி இது பற்றி மேலும் தெரி விக்கையில், தேசவிரோதக் கும்ப லுடன் தொடர்புடைய இருவருடைய பெயரைக் கூறியே இந்த அச்சு றுத்தல் தனக்கு கடந்த சில நாட்களாக தொடர்ந்து விடுக்கப் பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## பவள விழா ஒன்று கூடல்

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம் 75ஆம் ஆண்டின் பவள விழா கொண்டாடுவது தொடர்பாக கலைமகள் வித்தியாலய பழைய மாணவர் ஒன்றிய விசேட ஒன்று கூடல் கடந்த 27ஆம் திகதி பிப.4.00 மணிக்கு வித்தியாலய ஒன்று கூடல் மண்டபத்தில் ஒன்றியத் தலைவர் விஜிந்தன் தலைமையில் நடைபெற்று பாடசாலை அபிவிருத்தி பவளவிழா கொண் டாட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஒன்றிய செயலாளர் கமல தீபனின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவானது.(ஆ)

## தே.அ.அட்டைபெற விண்ணப்பிக்குக

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி திருநகர் கிராமத் தில் தேசிய அடையாள அட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவ டிக்கைகள் அப்பகுதி கிராம அலு வலர்களினால் மேற்கொள்ளப்பட் டுள்ளது. அப்பகுதி மக்கள் அதற் குரிய விண்ணப்பப் பத்திரங்க ளைப் பூர்த்திசெய்து கிராம அலுவ லகத் தில் ஒப்படைக்க வேண்டப் படுகின்றனர். (சோ,கு)

# இனந்தெரியாதோரின் சூட்டிற்கு வர்த்தகர் ஒருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பூபாலப்பிள்ளை-சிவப்பிரகாசம் (வயது-47) எனும் வர்த்தகர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பொலனறுவைக்குச் சென்ற இவர் வாழைச் சேனை நோக்கி வந்து கொண்டிருந்த வேளை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிசார் மேற்கொள்கின்றனர்.

# சமாதான தேசிய ஆலோசனை சபையை ஜாதிக ஹெல உறுமயவும் நிராகரிப்பு!

சமாதான முயற்சிகள் தொடர் பில் சனாதிபதி எதிர்வரும் 4 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ள சமாதானம் தொடர் பான தேசிய ஆலோசனை சபை யில் தாம் பங்கேற்கப் போவ தில்லை என ஜாதிக ஹெல உறு மய தெரிவித்துள்ளது. இதுதொடா பாக அக்கட்சி சனாதிபதி சந்திரி காவிற்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் தமிழீழ விடு தலைப்புலிகள் அமைப்பு பயங்க ரவாத அமைப்பாகும். எனவே அந்த அமைப்புடன் சட்ட ரீதியான அர சாங்கம் ஒன்று பேச்சுநடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாது. இடைக் கால நிர்வாகம் என்ற தமிழீழ விடு தலைப்புலிகளின் ஆலோசனையை மையமாகக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்துவது நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சியின் ஒரு அங்கமாகும். எனவே தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்களை முற்றாகக்களை வதற்கான கால அட்டவணை ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என் பது உட்பட்ட பல நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் அதனூடாக நடத்தப்படும் பேச்சு வார்த்தைக்கான ஆலோசனைக் குழுவில் தாம் அங்கம் வகிக்கத் தயார் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.இவற்றை விளக்கி அந்தக்கட்சி நேற்று முன்தினம் சனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. (32)

## எதிராகவும் ஆதரவாகவும் ஆர்ப்பாட்டம்

இடைக்கால நிர்வாக சபை யோசனைக்கு ஆதரவு தெரிவித்தும் எதிர்ப்புத் தெரிவித்தும் வியாழக்கிழமை கொழும்பில் இருவேறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன. கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையம் முன்பாக புதிய இடது சாரி முன்னணியின் ஏற்பாட்டில் நடை பெற்ற ஆர்ப்பாட்டத்தில் குறிப்பிட்ட இடைக்கால நிர்வாக சபை யோச னையின் அடிப்படையில் சமாதானப் பேச்சு வார்த்தையை உடனடி யாக ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக் கையும் முன் வைக்கப் பட்டது. ஜாதிக ஹெல உறுமய ஏற்பாட்டில் பத்தரமுல்லையில் நடை பெற்ற மற்றுமொரு ஆர்ப்பாட்டத்தில் விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனை நிராகரிக்கப்பட வேண்டும் என்ற கோஷம் முன்வைக்கப்பட்டது.

## நீங்காத நினைவுடன் ஒன்பதாம் ஆண்டில்



தாயின் மடியில் 14 - 08 - 1975

தாயக மண்ணில் 03 - 10 - 1995

### லெப்.நீலவண்ணன்

(சிவபாக்கியநாதன் பாபு)

*எம் வாழ்வெனும் சோலையின்*
*இளைய பூவே!*
*காலம் சபித்த*
*எம் தேசத்தின் துயர் மீட்க*
*தீயும் புலியானாய்.*
*அன்றொரு நாளில்*
*எம் இதயங்களில் இடியினை வீழுத்தி*
*பூவென உதிர்ந்தாய்.*
*விழிகளில் நீரோடு....*
*தினம் உன் நினைவுடன்*
*எம் காலங்கள் யாவும்.*

அன்றைய தினத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்கள் அனைவரையும் நினைவு கூருகிறோம்.

உடையார்கட்டு வடக்கு. (4695) சித்தப்பா குடும்பத்தினர்.

## மோசடி அம்பலம்

இராணுவ வாகனங்களில் இருந்து சட்டவிரோதமாக டீசல் பெற்று அவற்றை கொழும்பு மோதறைப் பகுதியில் மறைத்து வைத்து பின்னர் அதனை குறைந்த விலையில் விற்பனை செய்து வந்த இராணுவ கேணல் மற்றும் இரண்டு படைச்சிப்பாய்கள் தொடர்பாக தக வல்கள் வெளியாகியுள்ளன. இந்த டீசல் மறைவிடமும் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டது. அங்கிருந்து பல லீற்றர் டீசல் கைப்பற்றப்பட் டது. இதேவேளை இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளு மாறு இராணுவ பொலிசாரிடம் கேட்கப்பட்டுள்ளது. (32)

## பணிநிலை வெற்றிடம்

*கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி பணிநிலை வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்.*

01. பதவி : சாரதி
02. சம்பள குறியீட்டு இலக்கம்: 312/15
03. சம்பள அளவுத்திட்டம் : (3500 +1250) 4750-65x10-70x10 = 6100/=
04. வயதெல்லை : 21-45
05. தகைமைகள் : ஐந்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழ்களுடன் பஸ் அல்லது லொறி அல்லது நான்கு சில்லு உழவு இயந்திரம் பெட்டியுடனான சாரதி அனுமதிப் பத்திரத்துடன் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 15.10.2004 ஆம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாகவோ, நேரடியாகவோ தலைவர், கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.

(சி.10249)

## சேவையில் ஓய்வுறும்



### க.திருச்செல்வராசா

(உதவிகல்விப்பணிப்பாளர், முல்லை கல்விவலயம்)

அவர்களை

### வாழ்த்திடுவோம்... வழிதொடர்வோம்

**நல்லாசான்**

★புதுக்குடியிருப்பு ம.வி
1.11.76-03.01.81
தமிழ் தந்த தருணன்
சமூகக்கல்வி புகட்டும் சாதனையாளர்

**நல்லதிபர்**

★உடையார்கட்டு ம.வி
04.01.89 - 31.06.96
பொற்காலம்
நற்சேவையால் கூடம் வளர்ந்தது

**சொல்லவல்ல அதிகாரி**

★உதவிக் கோட்டக் கல்வி அதிகாரி புதுக்குடியிருப்பு
01.07.96 - 31.06.97
★உதவிக்கல்விப்பணிப்பாளர் முல்லை கல்வி வலயம்.
01.07.97 - 01.10.2004
தையல்பயிற்சி
முதியோர்கல்வி

முல்லை புதுநகரில் வல்ல எங்கள் ம.வியில்
நல்லதோர் ஆசானாய் கன்னிப்பணி தொடர்ந்தார்
சொல்லும் பொருளும் சோர்வின்றி செப்புவார்
அல்லும் பகலுமாக கல்விவளர உழைத்துவந்தார்.
சொல்லவல்ல அப் பெரியார் பல் பதவி உயர்வு பெற்று
முல்லை கல்விவலயத்தில் மிளிர்ந்தாரே... ஓய்வுவரை
பல்புகழான் ராசாவை பாரில் தந்த பெற்றார்க்கும்
நல்லவராய் வாழவைத்த மனையாளுக்கும் வாழ்த்துக்கள்.

பழைய மாணவர் சங்கம்,
மகாவித்தியாலயம்
மு.புதுக்குடியிருப்பு

(சி-10502)

# தமிழகத்தை பாலை வனமாக்கியவர் ஜெயலலிதா

## பா.ம.க. நிறுவுனர் சாடல்

தமிழகத்தைப் பாலைவனமாக மாற்றியதுதான் முதல்வர் ஜெயல லிதாவின் சாதனை என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் தனது அறிக்கை ஒன் றில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்.

தமிழக வரலாற்றில் மாநிலத்தின் வளர்ச்சிக்காவும், மேம்பாட் டுக்காவும் நான் செய்ததைபோல, நான் செய்து கொண்டிருப்பதைப் போல வேறு எந்த முதலமைச்சரும் கடுமையாக உழைத்தது இல்லை என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருக்கிறார். இப்படியொரு அபாண்டமான கருத்தை, தமிழ கத்தை ஒளி மயமாக்க பாடுபட்ட தலைவர்களை பழித்து கூறும் கருத்துக்களை தெரிவித்தற்காக அவர் வருத்தப்பட்டே ஆக வேண்டும். ஜெயல லிதாவின் 8ஆண்டு ஆட்சிக் காலத் தில் அவரது சாதனை என்று குறிப் பிட்டுச் சொல்லும் அளவுக்கு ஏதா வது ஒன்றைச் சொல்ல முடியுமா?

அண்டை மாநிலங்களுடன் சுமுக உறவு வைத்து ஒரே நாளில் பேச்சு வார்த்தை நடத்தி நதிநீர் ஒப் பந்தங்களை ஏற்படுத்திய பெருமை காமராயருக்கு உண்டு. ஆனால் தனது மோதல் போக்கால் நதிநீர் ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடி யாமல் தமிழகத்தை பாலை வன மாக்கி கொண்டிருக்கிறார் ஜெய லலிதா என்றும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பட்டப்பின் படிப்புகள் பீடம்

### முழுநேரப் பட்டப்பின்

### கல்வித்தகைமைக் கற்கைநெறி– 2004/2005

## புதிய அனுமதி

தனியார் பாடசாலைகளில் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர் களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன. விண்ணப்பதாரிகள் 2004.10.22 அன்று 50 வயதுக்குக் குறைந்த வர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டப்பின்படிப்புகள் பீடத்தில் ரூபா 50 இற்கான பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 50இற்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் ரூபா4.50பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட, சுயமுகவரியிடப்பட்ட தபால் உறையினையும் பீடாதிபதி, பட்டப்பின் படிப்புகள், பீடம், யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு அனுப்புதல் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**இக்கற்கை நெறிக்கான கட்டண விபரங்கள்:**

| | | |
|---|---|---|
| பதிவுக்கட்டணம்: | 750.00 | |
| கற்கைக்நெறிக்கட்டணம் | 10000.00 | |
| நூலக வைப்புக் கட்டணம் | 500.00 | (மீளப்பெறத்தக்கது) |
| நூலகக்கட்டணம் | 750.00 | |
| மொத்தம் | 12000.00 | |

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்துடன்,

1)பட்டத்தகைமைச்சான்றிதழ்.

2) பிறப்புச்சான்றிதழ்,

3) அதிபரின் சிபாரிசுக் கடிதம்.

ஆகிய ஆவணங்களையும் இணைத்து பீடாதிபதி, பட்டப் பின் படிப்புகள்பீடம், யாழ்.பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு 2004.10.22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தத்தம் அதிபருடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இக்குறிப்பிட்ட திகதிக் குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
01.10.2004

(சி-10245)

---

# குண்டுவெடிப்பு

(புதுடில்லி)

நாகலாந்து புகையிரத நிலை யமருகில் இரண்டு குண்டுகள் நேற்றுக்காலை வெடித்துள்ளன. 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாகலாந்தின் ஜிமாப்பூர் புகையிரத நிலையமருகிலேயே இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு நடந்துள்ளது. இந்தச்சம்பவத்திற்கு யார்? காரணம் என்று இன்னும் தெரியவரவில்லை என்று பொலி சார் கூறியுள்ளனர்.

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – இலங்கை

## பட்டப்பின் படிப்புகள் பீடம்

### ஈராண்டுப் பகுதிநேரப் பட்டப்பின்

### கல்வித்தகைமைக் கற்கைநெறி - 2004 / 2006

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா வளாகம்.

## புதிய அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் நடத்தப்படும் மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் அரச பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 2004.10.22 அன்று 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் ரூபா 50/= இற்கான பற்றுச்சீட்டினைச சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 50/= இற்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் ரூபா 4.50 பெறுமதியான முத்திரை ஒட்டப் பட்ட சுயமுகவரியிடப்பட்ட தபால் உறையினையும் 'பீடாதிபதி பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்' எனும் முகவரிக்கு அனுப்புதல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**இக்கற்கை நெறிக்கான கட்டண விபரங்களா:**

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | 750.00 | |
| கற்கைநெறிக் கட்டணம் | 10000.00 | |
| நூலக வைப்புக் கட்டணம் | 500.00 | (மீளப்பெறத்தக்கது) |
| நூலகக் கட்டணம் | 750.00 | |
| மொத்தம் | 12000.00 | |

எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு, இக் கற்கைநெறிக்குப் பதிவுசெய்யும்போது மேற் குறிப்பிட்ட இடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் 2004.10.22 ஆம் திகதிக்கு முன்னர் பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்

(சி.10246)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பதவி வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படை)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கொழும்பு/யாழ்ப்பாணம் விருந்தினர் விடுதிகளில் காவற்பொறுப்பாளர் (சமையல்) [Caretaker (Cook)] பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிட மிருந்து விண்ணப்பங்கள் 2004.10.29ஆம் திகதி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

தகைமைகள்

I. எழுத, வாசிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

II. சமையல் செய்யக்கூடிய பூரண அறிவு இருப்பதுடன் தளபாடப் பொருட்கள், பீங்கான் மட்பாண்டப் பொருட்கள், வெட்டும் கருவிகள் என்பனவற்றினைத் தகுந்த முறையில் பராமரிக்கக் கூடியவராகவும், வீட்டுத்தோட்டப் பராமரிப்புத் தெரிந்தவராகவும் பொருட்களின் விவரப் பட்டியலை பேணிப்பராமரிக்கத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பளம் : ரூபா 6440 மாதமொன்றிற்கு (நிலையானது)

வயது : விண்ணப்ப முடிவுத்திகதியில் 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு : பொது உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழகக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதியாளரிடம் ஒவ்வொரு விண்ணப் பப்படிவத்திற்கும் ரூபா 20 செலுத்தியபின்னர், இப்பல்கலைக கழகத்தில் அமைந்துள்ள தாபனக் கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களில் மட்டும் விண்ணப்பிக்கவேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும், விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20 பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 23X10 செ.மீ அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரையொட்டப் பட்ட தபால் உறையை அனுப்பவேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடாத விண்ணப்பங்களும், விண்ணப்ப முடிவுத்திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப் படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
2004.09.29

(சி-10248)

---

# யாழ்ப்பாணம் - மாநகரசபை

## கல்வியங்காடு சந்தைக் கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2004

மாநரகசபைக்குச் சொந்தமான கல்வியங்காடு சந்தையில் புதிதாகச் சபையால் அமைக்கப்பட்டுள்ள கடைகளை இலங்கைப் பிரஜைகளிடமிருந்து குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்.மாநரக ஆணையாள ராகிய என்னால் 22.10.2004ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிவரை ஏற்றுக்கொள்ளப் படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பிணைப்பணம் ரூபா 10,000 மும் மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக்கட்டணம் 1000 ரூபாவும் பெறுமதி சேர்வரி (Vat)ரூபா 150 (15%) உம் செலுத்துவதன் பெயரில் 21.10.2004ஆம்திகதி வியாழக்கிழமை நண்பகல் 12மணிவரையும் மாநகரசபையால் வழங்கப்படும். உத்தியோக பூர்வமான விண்ணப்பப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் கேள்விப் பத்திரம் பெற வரும்போது அவர்களுடைய தேசிய அடையாள அட்டையினைக் கொண்டுவருதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது" ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரியிட்டு, அரக்குமுத்திரையிட்ட உறையிலிட்டு, இடது மேல்மூலையில் ''கல்வியங்காடு சந்தைக்கடை குத்தகை'' எனக் குறிப்பிட்டு 22.10.2004 ஆம்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகர சபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 22.10.2004 ஆம்திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு கேள்விச்சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விகாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கமுடியும். எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

தங்களால் கோரப்படும் கேள்விக்கு மேலதிகமாக 15வீதம் பெறுமதி சேர்வரியும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும்.

| கடைகள் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (பெறுமதிசேர் வரி(Vat) தவிர்த்து) |
|---|---|
| 1. கீழ்தளக் கடைகள் (கடை ஒன்றுக்கு) | 360,000/= |
| 2. முதலாம் மாடிக்கடைகள் (கடை ஒன்றுக்கு) | 180,000/= |

க.குணராசா
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(சி-10481)

## கால் இறுதிக்கு கிலிஸ்டர்ஸ்



பெல்ஜியத்தில் நடைபெற்றுவரும் டென்னிஸ் போட்டியில் கால் இறுதிப் போட்டியில் அந்நாட்டு வீராங்கனை கிம் கிலிஸ்டர்ஸ், பல்கேரிய வீராங்கனை மலீவாவுக்கு எதிராக பந்தை திருப்பும் காட்சி. இதில் கிலிஸ்டர்ஸ் 6-3,6-4 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறினார்.

## சிம்பாப்வேஅரசுக்கு எதிரான இனப்பாகுபாடு குற்றச்சாட்டு மீதான விசாரணை இடைநிறுத்தம்

கிம்பாப்வேக்கு எதிரான இனப்பாகுபாடு தொடர்பான குற்றச்சாட்டு மீதான விசாரணை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நீதிமன்றின் நடைமுறை மீதான வெறுப்பின் காரணமாக சென்ற வியாழன் கிரிக்கெட் ஒன்றியம் கைவிடப்பட்டது.

சட்டவாளர் கிறிஸ் வென்றுறாஸ் முன்னாள் அணி வீரர்கள் குழுவாக இருந்த அறைக்கு சிம்பாப்வே கிரிக்கெட் யூனியன் அதிகாரிகள் செல்ல தடைவிதித்தார்.

'இருவர் கொண்ட குழுவால் விசாரணை நடாத்தப்படவேண்டும்' என்ற இவரது கோரிக்கை சிம்பாப்வே கிரிக்கெட் யூனியனால் நிராகரிக்கப்பட்டது.

"வாய்மூல சாட்சியத்தை இருவர் கேட்பது மேலானது என நான் எண்ணியிருந்தேன். ஆனால் தற்போது அது முடியாத காரியமாகி விட்டது என்றுள்ளார். சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் இஸான் மானி. இந்த வழக்கைத் தீர்ப்பதற்கு அபிப்பிராயங்கள் தற்போது எழுப்பப்பட்டு வருகின்றன.

கட்டாயப்படுத்தப்பட்ட சாட்சிகளாய் இருக்கக் கூடிய சிம்பாப்வே கிரிக்கெட் ஒன்றியத்தின் தற்போதைய நிர்வாகத்தினர்களுடன் கிறிஸ் வென்றுறாஸ் வாக்குவாதம் செய்துள்ளார். ஒஷியாஸ்ப்வுற், மக்ஸ் ஏப்ரகாம், ரவன்வா மொகலானி ஆகியோரே இவர்களாவர்.

தென்னாபிரிக்க நீதியாளர் ஸ்ரீவன் மஜீட்ற், இந்தியாவின் சட்ட ஆலோசகர் நாயகம் ஹூலம் வாகன் வரி ஆகியோரே இவ் விசாரணைக்கென நியமிக்கப்பட்ட இருவராவர்.

இதில் வகான்வரி ஊடகங்களுக்குப் பிழையான தகவல் வழங்கியதாக வென்றுறாசைக் குற்றம் சாட்டியுள்ளார்.

விசாரணையின் முடிவு வெறுப்புண்டாக்குவதாக இருந்தாலும் விசாரணைக் குழு சரியான திசையில் தீர்மானம் எடுக்கும் என்ற நம்பிக்கை மீதம் இருப்பதாக அணி வீரர்களில் ஒருவரான ஸ்ருவாட் கார்லிஸ் தெரிவித்துள்ளார்.

இரு நபர் விசாரணைக் குழுவால் எட்டப்படும் முடிவுகள் இம் மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துரையாடப்படுவதற்கென சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழுவிடம் சமர்ப்பிக்கபடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



சட்டவாளர் கிறிஸ் வென்றுறாஸ் மற்றும் முன்னாள் வீரர்கள் விசாரணையின் பின் வெளியேறுகின்றனர்.

## இராண்டாவது ஒரு நாள்போட்டியில் பாக்.சிம்பாப்வே அணிகள் இன்று மோதல்

பாகிஸ்தான், சிம்பாப்வே, இலங்கை அணிகள் கலந்து கொள்ளும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது.

இதன் 2ஆவது ஒரு நாள் போட்டி இன்று பெஷாவரில் நடக்கிறது. இதில் பாகிஸ்தான்-சிம்பாப்வே அணிகள் மோதுகின்றன. 6ஆம் திகதி பாகிஸ்தான்-இலங்கை இடையேயான ஆட்டம் நடக்கிறது. முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் சிம்பாப்வேயை வென்று 2 புள்ளிகளுடன் உள்ளது. இரு அணி வீரர்கள் விபரம் வருமாறு;-

பாகிஸ்தான்;- இன்சமாம்(தலைவர்), யுகானா, ரசாக், யுனிஸ்கான், அப்ரீடி, மாலிக், உல்ஹசன், சல்மான்பட்,பாசிக்கான், அக்தர், முகமது சமி, மோயின்கான்.

சிம்பாப்வே;- தைபு(தலைவர்), சிக்கும்புரா, இப்ராகிம், ஹொண்டோ, முப்பரிவா, நக்லா,ரேயின்ஸ் போர்டு, சிபன்ந்தா டெயிலர், கிரிமர், மார்க்வெர் மூலன்.

## இந்திய கிரிக்கெட் அணி டிசம்பரில் பங்களாதேஷ் பயணம்

இந்திய கிரிக்கெட் அணி இம்மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.இதனையடுத்து தென்னாபிரிக்க அணி இந்தியா சுற்றுப் பயணம் செய்து விளையாடுகிறது.

இதனைத் தொடர்ந்து இந்தியக் கிரிக்கெட் அணி டிசம்பர் மாதம் பங்காளதேசத்தில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் ஆடவுள்ளது.இரு அணிகள் இடையேயான போட்டி விபரம் வருமாறு ;-

டிசம்பர், 9-13 ஆம் திகதி வரை முதல்டெஸ்ட்
டிசம்பர், 16-20 ஆம் திகதி 2 ஆவது டெஸ்ட்
டிசம்பர், 23 ஆம் திகதி முதல் ஒரு நாள் போட்டி
டிசம்பர், 25 ஆம் திகதி 2 ஆவது ஒரு நாள் போட்டி
டிசம்பர், 27 ஆம் திகதி 3 ஆவது ஒரு நாள் போட்டி.

விளையாட்டு



இந்திய சீனியர் அணிக்கு எதிரான நான்கு நாள் பயிற்சிப் போட்டியில் சதம் அடித்த யுவராஜ்சிங் மற்றும் சேவாக்.

## இந்திய,பாகிஸ்தான் டெஸ்ட் ஹொக்கி 4ஆவது போட்டி சமநிலையில் நிறைவு

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 4ஆவது டெஸ்ட் ஹொக்கிப் போட்டி 4-4 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இந்திய ஹொக்கி அணி பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது.இரு அணிகள் இடையே பாகிஸ்தானில் நடந்த 4 டெஸ்ட் ஹொக்கிப் போட்டித் தொடரில் முதல் 3 ஆட்டங்கள் முடிவில் பாகிஸ்தான் 2-1 என்ற கணக்கில் முன்னணி வகித்தது.

இந்த நிலையில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையே 4ஆவது டெஸ்ட் ஹொக்கிப் போட்டி லாகூரில் நடந்தது. இதில் இரு அணிகளும் 4-4 என்ற கோல்களைப் போட்டு சமநிலை பெற்றன.

## 13ஆவது சர்வதேச மரதன் போட்டி இந்தியாவில் இன்று நடைபெறுகின்றது



மரதன் ஆரம்பிக்கும் அரங்கு.

13ஆவது சர்வதேச அரை மரதன் போட்டி புதுடில்லியில் இன்று நடைபெறுகிறது.

ஆசியாவில் முதன் முதலாக நடைபெறும் இப்போட்டியில் 64 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த 300 போட்டியாளர்கள் பங்கேற்கின்றனர்.

21 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இப்போட்டியில் முதலிடம் பெறும் ஆடவர் மகளிருக்கு தலா ரூபா 15 இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படவுள்ளது.

ஜப்பானைச் சேர்ந்த யோகினோபு நாகசாகி, மொரோக்கோவைச் சேர்ந்த ஹரோ.ஃ.பி எதியோப்பியாவை, சேர்ந்த அபெபெ தின்கெசா உள்ளிட்ட நட்சத்திர வீரர்களும், ஹபிடா இஸெம், ஹென்ஸா வாஹபி (இருவரும் மொராக்கோ), கெய்கோ இசோகை, யூகிசைட்டோ (இருவரும் ஜப்பான்), யாம்னா ஔபெஹு (பிரான்ஸ்) உள்ளிட்ட நட்சத்திர வீராங்கனைகளும் போட்டியில் பங்கேற்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

டில்லிவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தொடங்கி, அங்கேயே போட்டி முடிவடைகிறது.

தனி நபர் போட்டியைத் தவிர குழுப் போட்டியும் நடைபெறுகிறது. அதிகபட்சமாக 5பேர் ஒரு குழுவில் இடம்பெறவேண்டும். 3 பேராவது போட்டியைக் கடந்து முடிக்கவேண்டும்.3 பேரும் எட்டிய நேரத்தை ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டு எத்தனையாவது இடம் என்பது தீர்மானிக்கப்படும். இதில் வெற்றி பெறும் குழுவுக்கு ரூபா 7 இலட்சமும், இரண்டாமிடம் பெறும் குழுவுக்கு 5.5 இலட்சமும் பரிசாகக் கிடைக்கும்.

## முக்கோணத் தொடரைக் கைப்பற்றுவோம்

### யுகானா

பாக்டெல் கிண்ண முக்கோணத் தொடரில் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெறுவோம் என பாகிஸ்தான் அணியின் உபதலைவர் யூசுப் யுகானா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணிக்கு எதிராக 144 ஓட்டங்களால் வெற்றியீட்டிய பின்னர் கருத்துத் தெரிவித்த யுகானா, இறுதிப் போட்டி உட்பட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றியீட்டுவோம் என நம்பிக்கை தெரிவித்தார்.

## தாய்லாந்து ஓபன் டென்னிஸ் பயஸ்-பூபதி ஜோடி தோல்வி

தாய்லாந்து ஓபன் டென்னிஸ் போட்டி பாங்கொக்கில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் இரட்டையர் பிரிவில் 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் லியாண்டர்பயஸ்-மகேஸ் பூபதி (இந்தியா) ஜோடி அமெரிக்காவின் ஜஸ்டின்-ஆலிவர் ஜோடியுடன் மோதியது. இதில் லியாண்டர் பயஸ்-மகேஸ் பூபதி ஜோடி 7-6,4-6, 4-6 என்ற செட் கணக்கில் தோல்வி கண்டது.

### சந்திரோதயா வி.கழகம் நடாத்தும்

## மாவீரர் வெற்றிக்கிண்ணத்திற்கான கால்பந்து, கைப்பந்துப் போட்டிகள்

சந்திரோதயா விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாவீரர் வெற்றிக்கிண்ண கால்பந்து, கைப்பந்து சுற்று போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆறு கால்பந்துப் போட்டிகளும், மூன்று கைப்பந்துப் போட்டிகளும் நடைபெற்றன.

கால்பந்துப் போட்டியில் இளந்தளிர் அணியை ஜொலிபோய் அணி 6-2 என்ற கோல் எண்ணிக்கையிலும், பரந்தன் இளைஞர் வட்ட அணியை லக்கிஸ்ரார் மஞ்சள் அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையிலும், உருத்திரபுரம் B அணியை திருநகர் நீலம் அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையிலும், மருதநகர் உதயதாரகை அணியை உழவர் ஒன்றியம் A அணி 3-1 என்ற கோல் எண்ணிக்கையிலும், ஸ்கந்தா B அணியை லக்கிஸ்ரார் நீலம் அணி 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும், உருத்திரபுரம் A அணியை சோலை அணி 2-0 என்ற கோல் எண்ணிக்கையிலும் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

போட்டியின் இறுதி நாளான இன்று கால்பந்து காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

கைப்பந்துப் போட்டியில் அம்பாள்குளம் இளந்தென்றல் அணியும், கிருஷ்ணபுரம் கிருஷ்ணபாரதி அணியும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன. இறுதிப் போட்டியும் இன்று நடைபெறவுள்ளது.

### கராத்தே சுற்றுப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை நடாத்தும் கராத்தே சுற்றுப்போட்டி எதிர்வரும் 7-10-2004 அன்று நடைபெறவுள்ளது. இச் சுற்றுப்போட்டி கிளிநொச்சி மத்திய மைதானத்தில் நடைபெற இருப்பதனால் சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவிரும்பும் கிளிநொச்சி மாவட்ட வீரர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பாக கிளிநொச்சி மாவட்ட இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் பதிவுகளை பிரதம கராத்தேப் பயிற்சி ஆசிரியர் விஜயராஜ்சிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையினர் கேட்டுக் கொள்கின்றனர். (சோ,கு)



### சிந்தனைக்கு

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவளிகளைச் சந்திக்கின்றது; பல நெருக்கடிகளை எதிர் கொள்கின்றது; கொந்தளிப்பான பல சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கின்றது

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 03-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அமைதியைக் குலைக்க...!

மன்னாரில் விடுதலைப்புலிகளின் அலுவலகங்கள் மீது முஸ்லிம் தேசவிரோதக் குழுக்கள் நடத்திய தாக்குதலானது சிறிலங்கா பொலிசாரின் ஆசிர்வாதத்துடனும், ஒத்துழைப்புடனும் நடத்தப்பட்டது என்பதற்கு ஆதாரம் தேடத்தேவையில்லை. ஏனெனில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கையில் பொலிசார் பார்த்துக்கொண்டிருந்தமையும், ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தமையும் இவற்றை இலகுவில் புரியவைக்கப் போதுமானதாகும்.

இதேவேளை சிறிலங்காப் பொலிசார் இவ்வாறு நடந்து கொண்டமையும் ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. இது நீண்ட காலமாகச் சிறிலங்கா அரசு அதன் ஆயுதப்படையினர், பொலிசார் கைக் கொண்டு வரும் வழமையானதொரு அணுகுமுறையே ஆகும். அதாவது தமிழ், முஸ்லிம் மக்களின் இடையே பகை உணர்வை/மோதலை வளர்த்து. தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தைப் பலவீனப்படுத்துவது அவர்களின் நீண்டகால அணுகுமுறை/தந்திரோபாயமாகும் .

இதேசமயம் முஸ்லிம் தரப்பிலுள்ள காடையர் குழுக்கள், தேசவிரோதக் குழுக்கள் மற்றும் சில அரசியற் தலைமைத்துவங்களும் இத்தகைய மோதல்கள் முரண்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்து வளர்த்து விடுவதும் வழமையானதே. இதன் மூலம் அரசியல்வாதிகளின் அதிகார அபிலாசைகள் நிறைவேறுவதும், சமூக விரோத சக்திகள் சுகவாழ்வும், சுயலாபமும் ஈட்டிக்கொள்வதும் உண்மையே.

மன்னாரில் கரிசல் பகுதியில் இனந்தெரியாதோரால் முஸ்லிம் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே விடுதலைப புலிகளின் அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சுட்டுக்கொன்றவர்கள் யார்? என உறுதிப்படுத்தப்படாத நிலையிலும் நடத்தப்பட்டுள்ள இத்தாக்குதலானது மன்னார்ப் பகுதியில் அமைதி நிலையைக் குலைப்பதற்காகத் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எனக் கூறின் அதில் தவறில்லை.

ஏனெனில் சுட்டுக்கொல்லப்பட்டவரின் பின்னனி என்ன? இவர் ஏன் விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட வேண்டும்? அதற்கான தேவை என்ன? என்பது குறித்த தகவல் எதுவும் வெளிவராத, வெளியிடப்படாத நிலையில் புலிகளே சுட்டுக்கொன்றார்கள் எனக் குற்றம் சாட்டுவதும், விடுதலைப் புலிகளின் காரியாலயங்களைத் தாக்குவதும் திட்டமிட்ட நோக்கங்கள் அல்லாது வேறு எவ்வாறு இருக்கமுடியும்?

சுட்டுக்கொல்லப்பட்டவர் தொடர்பாக ஆரம்பத்தில் வெளியான தகவல் ஒன்று அவர் போதைவஸ்துக் கடத்தலுடன் தொடர்புபட்டவர் என்று கூறுகின்றது. ஆனால் அவர் அத்தகைய தொடர்பு உள்ளவரோ இல்லையோ என எம்மால் ஊர்ஜிதம் செய்ய முடியாது. ஆனால் ஒருவரை எவரும் காரணம் எதுவும் இல்லாது சுட்டுக்கொன்றிருக்க முடியாது.

அவர் போதை வஸ்துக்கடத்தலுடன் தொடர்புடையவர் எனின் அவர் நிச்சயமாகப் பாதாள உலகக் கோஷடிகளுடன் தொடர்புபட்டவராக இருந்திருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்திருக்குமேயானால் அவரின் கொலையானது போதைப் பொருள் வர்த்தகத்தில் ஏற்பட்ட மோசடிகள் அன்றிப் பாதாள உலகக் கோஷடிகள் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் என்பவற்றாலும் ஏற்பட்டிருப்பதற்கு வாய்ப்புண்டு.

அவ்வாறு இல்லாது அவருக்கும் போதைவஸ்துக் குழுவிற்கும் எந்த வித தொடர்பும் இல்லை எனின், அவர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குத் தனிப்பட்ட ரீதியிலான காரணங்களே இருந்திருத்தல் வேண்டும். ஆனால் தனிப்பட்ட கொலைகளுடனும் விடுதலைப் புலிகளைச் சம்பந்தப்படுத்துவது பொருத்தப் பாடானதொன்றல்ல.

இந்நிலையில் விடுதலைப்புலிகளுடன் இக்கொலைகளைச் சம்பந்தப்படுத்துவதும் விடுதலைப்புலிகளின் காரியாலயங்களைத் தாக்குவதும் முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான நல்லுறவையும், நிலவிவரும் அமைதியான சூழ்நிலையையும் சீர்கெட வைப்பதற்குத் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கதாக இருக்கும். அத்தோடு இதன் பின்னணியில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பும், சில அரசியல்வாதிகளும், முஸ்லிம் தேசவிரோதக்குழுக்களும் மோசடிக்கரார்களும் மறைமுகமாகவும் நேரடியாகவும் சம்பந்தப்பட்டிருப்பதற்கும் வாய்ப்புண்டு.

ஆனால் இத்தகையான போக்கானது ஆபத்தானதாகும். மன்னாரில் ஏற்கனவே மதரீதியிலான முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டதுண்டு. தற்பொழுதும் அதை ஒத்த வகையிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் இவற்றால் யாரோ நன்மையடைய மக்கள் துன்பமடையும் நிலை உருவாகிவிடும்.

# ஊழல், ஒழுங்கீனம் காரணமாக மக்கள் அரசு மீது அதிருப்தி கொண்டுள்ளனர்

## அமைச்சர் அநுரா திசநாயக்க

(கொழும்பு)

பெரும் ஊழல்கள் ஒழுங்கீனங்கள் காரணமாக நாட்டு மக்கள் அரசாங்கத்தின் சேவைகள குறித்து அதிருப்தி கொண்டுள்ளனர் என்று சிறிலங்காவின் விவசாய அமைச்சர் அநுரா திசநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் நாட்டிலுள்ள ஒவ்வொரு துறையிலும் பங்குகளைக் கொண்டிருந்தால் மாத்திரமே மக்களிற்கு நன்மை பயக்கும் பொருளாதரத்தைக் கட்டியெழுப்ப முடியும். விசேடமாக உற்பத்தி, கட்டட நிர்மாணம், வர்த்தகம், வங்கியியல், காப்புறுதி ஆகிய துறைகளுக்கு இது பொருத்தமானதாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாகிஸ்தான், மலேசியா, கியூபா, அல்ஜீரியா உள்ளிட்ட பல வெளிநாட்டமைச்சர்களைக் கதிர்காமர் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

நியூஜோர்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பல நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். அல்ஜீரியா, லாவோஸ், பாகிஸ்தான், நைஜீரியா, உருகுவே, மலேசியா, இந்தோனிசியா, கியூபா ஆகியநாடுகளின் வெளிநாட்டமைச்சர்களை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துப் பேசியுள்ளார்.

சமய சின்னங்கள் துஷ்பிரயோகம செய்யப்படுவதற்கெதிராக இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள பிரேரணைக்கு லாவோஸ் ஆதரவைத் தெரிவித்துள்ளது. யுனெஸ்கோ நிறுவனத்தின் நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஆசியான் பிராந்தியக் குழுவில் அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்திற்கு லாவோஸ் வெளிநாட்டமைச்சர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

உருகுவே வெளிநாட்டமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்திய அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மெக்சிக்கோ வர்த்தக அணியுடன் சலுகை வர்த்தக உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் பற்றி ஆராய்ந்துள்ளார்.

மலேசியா வெளிநாட்டமைச்சருடன் அமைச்சர் கதிர்காமர் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். இதன் பயனாக மலேசியாவின் வறுமை ஒழிப்புத் திட்டத்தை ஆராய்வதற்கென இலங்கை குழுவொன்றை அனுப்பி வைக்கவுள்ளது.

# தேசிய ஆலோசனைச் சபை குறித்து மேலும் விளக்கம் தேவையென்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமாதானத்திற்கும், நல்லிணக்கத்திற்குமான உத்தேச தேசிய ஆலோசனைச் சபை குறித்து பேச்சு வார்த்தை நடத்தச் சந்தர்ப்பம் தருமாறு சனாதிபதியிடம் கோரியுள்ளது.

முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் சனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் ஆலோசனைச் சபையின் செயற்பாடுகள் போதிய அளவு தெளிவாக இல்லை என்றும், அது பற்றி மேலும் விளக்கம் தேவையென்றும் தெரிவித்துள்ளதுடன், சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஆலோசனைச் சபையின் பங்கு பற்றியும், சபையின் அமைப்புப் பற்றியும் செயற்பாடுகள் பற்றியும் தாம் அறிய விரும்புவதாகவும் அவர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார்.

சபையின் செயற்பாடுகள் தமக்குத் தெளிவாகத் தெரிந்த பின்னர் உத்தேச சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வது பற்றித் தீர்மானம் எடுக்கவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சனாதிபதி கடந்த மாதம் 17 ஆம் திகதி ஹக்கீமுக்கு அனுப்பி வைத்த கடிதத்திற்குப் பதிலாக அவர் இந்தக் கடிதத்தை சனாதிபதிக்கு அனுப்பிவைத்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பதற்ற நிலையைத் தணிக்க இருதரப்பு நல்லிணக்கக்குழு அமைப்பு

(வவுனியா செய்தியாளர்)

மன்னாரில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தணிக்க தமிழ்-முஸ்லிம் சமூகங்களை உள்ளடக்கிய இருதரப்பு நல்லிணக்கக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பதற்ற நிலையினைத் தொடர்ந்து மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம், தலைமையில் அவசர கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. இதில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், வினோநோகராதலிங்கம், மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப், முஸ்லிம் அரசியல்வாதி ஜனாப் நூர்டீன் மசூர் உட்பட தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் இப்பதற்ற நிலையைத் தணிக்கும் நோக்கிலும் இனிமேல் இவ்வாறான செயல்கள் இடம்பெறாதிருக்கவும் தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இருதரப்பு நல்லிணக்கக் குழு அமைக்கப்பட்டுள்ளது.இக்குழு மாதாந்தம் கூடி தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராய உள்ளது. (10)

# அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் வவுனியா விஜயம் திடீரென ரத்து

(வவுனியா செய்தியாளர்)

நாளை (ஞாயிறு) வவுனியா பொது வைத்தியசாலையில் நடைபெற இருந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ள இருந்த சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் விஜயம் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது.

இன்று வடக்கு-கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மருத்துவ மாதுகளிற்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருந்த நிமால் சிறிபால டி சில்வா காரணம் எதுவும் குறிப்பிடாது தமது விஜயத்தை ரத்துச் செய்துள்ளார்.

எனினும் மருத்துவ மாதுக்களிற்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வும் , பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வும் திட்டமிட்டபடி இன்று வவுனியா பொது வைத்தியசாலையில் நடைபெறும் என மாகாண சுகாதார சேவைகள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (10)

## 5 வைத்தியசாலைகளில் கிணறுகள் அமைப்பு

(வவுனியா செய்தியாளர்)

யுனிசெப் நிதியுதவியில் வவுனியாவில் உள்ள ஐந்து வைத்தியசாலைகளில் கிணறுகள் கட்டப்படுவதாக வவுனியா மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் A.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். இவ்வைத்தியசாலைகளில் நிலவிய நீர்த் தட்டுப்பாட்டை அடுத்து யுனிசெப் நிறுவனம் தானாக முன்வந்து இந்நிதியுதவியினை மேற்கொண்டுள்ளதாகவும், இதன்மூலம் நோயாளர்களின் தேவைகள் இலகுவில் பூர்த்தி செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# 2ஆம் லெப்.மாலதியின் நினைவு நாளையொட்டி
# முல்லைத்தீவுமாவட்ட பெண்கள் சங்கம நிகழ்வு

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் 2ஆம்லெப்டினன்ட் மாலதியின் நினைவு நாளையுமொட்டி பெண்கள் சங்கம நிகழ்வு நேற்று முள்ளியவளை மத்திய கல்லூரியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பெண்கள் சங்கம நிகழ்வான இந் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் முல்லைமாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலிருந்தும் பெண்களைப் பங்கு கொள்ளச்செய்யும் விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டு வெகு சிறப்பாக நடைபெற்றது.

நேற்றுக்காலை 10.00மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வின் பொதுச்சுடரினை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அவர்கள் ஏற்றி வைக்க, தமிழீழதேசியக்கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் முகுந்தன் அவர்கள் ஏற்றினார். தொடர்ந்து 2ஆம் லெப்.மாலதியின் நினைவுச் சுடரினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி அவர்கள் ஏற்றிவைக்க, உருவப்படத்திற்கு மலர் மாலையினை முள்ளியவளை பிரதேச பங்குத்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் அணிவிக்க வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்கள் மலர் வணக்கத்தினை ஆரம்பித்துவைத்தார்.






தொடர்ந்து முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் வேளினியின் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வுகளில் தலைமை உரையினைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் மகளிர் அணியினரின் சுதந்திரப்பறவைகள் பத்திரிகையினை அதிகளவில் மக்களுக்கு விநியோகித்த ஒலுமடு மாதர் சங்கத்தினருக்கான பரிசினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி அவர்கள் வழங்கினார். அடுத்து "சமூகத்தில் பெண்களின் பங்கு" பற்றிய கருத்துரையினைத் தொடர்ந்து தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி அவர்கள் சிறப்புரையினை நிகழ்த்த தொடர்ந்து டாக்டர் ஜெயக்குலராஜா அவர்களின் கருத்துரை நடைபெற்றது.

இதனையடுத்து யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அவர்களின் சிறப்புரையும் அதனைத் தொடர்ந்து யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் அவர்களின் நெறியாள்கையில் யாழ் பெண்கள் பண்பாட்டு மையத்தினர் நடத்திய, சமுதாய எழுச்சியில் பெண்களின் பங்கு, என்ற இசை நடன நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றன. தொடர்ந்து வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்கள் உரை நிகழ்த்தினார். அத்தோடு பெண்கள் எழுச்சி பற்றிய கருத்துக்களை மாதர்சங்கத்தின் உறுப்பினர்கள் நிகழ்த்தினார்கள் இந் நிகழ்வில் முல்லை மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பெண்கள் பங்குபற்றினர். (ச,தீ,20)

# "கண்ணீர்ப் பயணங்கள்" பாகம்-1,2 நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

"கண்ணீர்ப்பயணங்கள்" (பாகம்-1,பாகம்-2,) நூல் வெளியீட்டு விழா நேற்றுக்காலை 10.00 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் முருகு பாரிமகன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை சொலமன் சூசிறில் அவர்களும், அருந்தவபாலன் அவர்களும், தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவாணன் அவர்களும், ஏற்றிவைத்தனர். அகவணக்கத்தைத் தொடர்ந்து வரவேற்புரையினை .அ.திருநாவுக்கரசர் அவர்களும், சிறப்புரையினை அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களும் நிகழ்த்தினர்.

வெளியீட்டுரையினை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அவர்கள் நிகழ்த்தினார். சிறப்புப் பிரதிகளை சோ.தங்கன் அவர்கள் வழங்கினார். நூல் மதிப்பீட்டுரைகளை ஈழநாதம் செய்தி ஆசிரியர் சி.சிவபாலன் அவர்களும், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி அவர்களும் நிகழ்த்தினர். தொடர்ந்து நூலாசிரியர் ம.ஆன்சிலின் அவர்களின் பதிலுரை இடம்பெற்றது. (செ)

# குலேந்திரன் சிவனேந்திரன் பளை அரசியல்துறை செயலகத்தில்

## -கூட்டிச் செல்லுமாறு பெற்றோருக்கு அழைப்பு

கல்மடு வீதி புளியகுளத்தைச் சேர்ந்த குலேந்திரன் சிவனேந்திரன் வயது 09 எனும் சிறுவன் பளைப் பிரதேச அரசியல்துறைச் செயலகத்தில் நிற்கின்றார் இவருடைய பெற்றோர்கள் வந்து இவரைப் பொறுப்பெடுத்துச் செல்லுமாறு பளை அரசியல்துறையினர் வேண்டி நிற்கின்றனர்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருகையில், நேற்று மதியம் 1.00 மணியளவில் பளைப் பகுதியில் பிள்ளையார் புடவைக் கடை உரிமையாளர் அவர்கள் மோட்டார் சைக்கிளில் சென்ற போது மேற்படி சிறுவன் அவரை மறித்து புளியங்குளம் போக வேண்டும் என்று கூறினார் அப் புடவைக் கடை உரிமையாளர் சிறுவனை விசாரித்த போது தான் வீட்டில் இருந்து தெரியாமல் யாழ்ப்பாணம் போனதாகவும் தற்போது புளியங்குளம் போக வந்துள்ளதாகவும் கூறியுள்ளார். ஆகவே அச் சிறுவனை அவர் அப்பகுதி அரசியல்துறைச் செயலகத்தில் ஒப்படைத்துள்ளார்.

# புலிகளுடன் இணைய வந்த சிறுமி பெற்றோரிடம் ஒப்படைப்பு

தனது சுயவிருப்பின் பேரில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய வந்த சிறுமியொருத்தியை அவரது பெற்றோரிடம் விடுதலைப் புலிகளின் மட்டு -அம்பாறை மகளிர் அரசியல்துறையினர் நேற்று முன்தினம் கையளித்தனர்.

தனது சுயவிருப்பின் பேரில் இணைய வந்த காரைதீவைச் சேர்ந்த கந்தசாமி சகுந்தலா (வயது15) எனும் சிறுமியே இவ்வாறு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டவராவார்.அரசடித் தீவில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் மகளிர் மாவட்ட அரசியல் செயலகத்தில் வைத்தே பெற்றோரிடம் இவர் ஒப்படைக்கப்பட்டார்.

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால் தென்பகுதிக்குத் தமிழர்களை அனுமதிக்கக் கூடாது

## -ஹெல புதுசங்கமய என்ற அமைப்பின் செயலர் தெரிவிப்பு

கோமரங்கடவல பகுதியில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட இரண்டு ஊர்காவல் படைவீரர்களையும் விடுவிக்கக் கோரி நேற்று திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது ஹெல புது சங்கமய என்ற அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியது இதன் போது உரையாற்றிய ஹெல புது சங்கமயவின் செயலர் நாலக்க விஜயசிங்க, வடக்கில், கிழக்கில் வாழும் தமிழர்கள் நாட்டின் ஏனைய பகுதியில் வாழும் தமிழர்களில் ஒரு வீதத்தினரே எனக் குறிப்பிட்டார். இந்த நிலையில் இவர்களைக் கொண்டு போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இலங்கையின் ஏனைய பகுதியில் உள்ள தமிழர்களும் தேவையெனில் அவர்களையும் வடக்கு கிழக்குக்கு அனுப்பி வைக்கத் தமது சங்கம் தயார் எனத் தெரிவித்தார். அதே நேரம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் ஹபரனைக்கு அப்பால் உள்ள தென் பகுதிக்கு தமிழர்களையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் அனுமதிக்கக் கூடாது என்ற கருத்தையும் அவர் வெளியிட்டார்.

இதேவேளை நேற்று உண்ணா விரதப் போராட்டத்தை நடத்தும் ஊர்காவல்படை வீரர்களின் உறவினர்களைப் பார்வையிடச்சென்ற ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ சுமங்கலவை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்போர் தம்மை அவர் சந்திக்க அனுமதிக்கவில்லை தமது போராட்டத்தில் அரசியலைக் கலக்க விரும்பவில்லை எனக்கூறியே இந்த அனுமதி மறுப்பு எனத் தெரிவிக்கப்பட்டது

## மட்டு இல்...

மடுப்பகுதியில் பதுங்கியிருந்து தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மேலும், நேற்று முன்தினம் மாலை வாகனேரிக்கும் புனானைக்குமிடையில் வாழைச்சேனை வர்த்தகரான பூபாலப்பிள்ளை சிவப்பிரகாசம் மீதான துப்பாக்கிப்பிரயோகமும் இந்தத்தேச விரோதக் குழுவினராலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இதேவேளை மட்டக்களப்பில் தேசத் துரோகி கருணா குழுவைச் சேர்ந்தமற்றும் இருவர் விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை 6.15 மணியளவில் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு வாகரை ஓமடியா மடுப் பகுதியில் நடத்திய இத்தாக்குதலில் கருணா குழுவைச் சேர்ந்த நித்தி, கஸ்ரோ ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர். ஏனையோர் காயங்களுடன் தப்பியோடிவிட்டனர் இவர்களிடமிருந்து தொடர் இலக்கம் அழிக்கப்பட்ட நிலையில் ரி.56 ரக துப்பாக்கியொன்றும், ஆர்.பி.ஜி எறிகணைகள், கிளைமோர்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன. கொல்லப்பட்ட தேசத்துரோகி நித்தி பனிச்சங்கேணியில் விடுதலைப்புலிகளின் காவலரண் மீது ஆர்.பி.ஜி.தாக்குதலை நடத்திய குழுவில் இருந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வீரவணக்கம்....

மலை தற்.முகவரி- இடதுகரை முத்தையன்கட்டு-முல்லை. என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## ஹெல...

தான் கட்சியில் இருந்து வெளி யேற்றப்பட்டது சட்ட பூர்வமற்றது என நீதிமன்றம் அதனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என மனுதாரரான புஞ்ஞானந்ததேரர் கோரியுள்ளார்.கடந்த பாராளுமன்ற சபாநாயகருக்கான தேர்தலின் போது ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் புஞ்ஞானந்ததேரருக்கும் இடையிலான முறுகல் அதிகரித்தது தெரிந்ததே.

## புலிகள்...

கடந்த 22ஆம் திகதி வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் இரு தரப்பினருக்குமிடையில் இடம் பெற்ற புரிந்துணர்வு சந்திப்பின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய மாதத்தில் இரு தடவை இத்தகைய சந்திப்பு மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்த்துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார். இதன் காரணமாகவே குறிப்பிட்ட சந்திப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இது தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே உத்தேச சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## எச்...

சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய வேளை மேற் கண்டவாறு தெரிவித்துள்ளனர். இதில் அமைச்சர் அநுரபண்டார நாயக்க மக்கள் விடுதலை முன் னனியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, இலங்கை-சீன நட்புறவு அமைப்பின் தலைவர் விஜித லோரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அத்துமீறலை...

வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.இந்திய கடலோரக் காவற் படையினர், இலங்கைக் கடற்படையினர் ஆகியோரது ஒத்துழைப்புக்களுடன் இந்திய மீனவர்கள் யாழ். குடாநாட்டுக் கடற்பரப்பில் அத்துமீறி மேற்கொள்ளும் அடாவடித்தன்ங்களும், அராஜகங்களும் இலங்கை அரசின் இனவாதச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண தமிழ் மக்களது வாழ்வில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதால் இவ்வாறான அத்துமீறல்களை இந்திய மீனவர்கள் கைவிடவேண்டும் எனவும் அவர் மேலும் இந்திய மீனவரிடம் வலியுறுத்தியுள்ளார். (33)

## பா.உ....

இவருடன் சிறப்பு அதிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், த.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு மட்டும் இந்தக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. "தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் நீ பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டால் கொலை செய்யப்படுவாய் என இந்தக் கொலை அச்சுறுத்தலில் தனக்கு விடுக்கப்பட்டுள்ளதாக இதனை உறுதிப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி இது பற்றி மேலும் தெரிவிக்கையில், தேசவிரோதக் கும்பலுடன் தொடர்புடைய இருவருடைய பெயரைக் கூறியே இந்த அச்சுறுத்தல் தனக்கு கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து விடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## திருகோணமலை....

பொறுப்பாளர் காருண்யா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய வீரா, எதனையும் சொல்வது எளிது ஆனால் செய்வது கடினம், இன்று சமாதான சூழ்நிலை ஒன்று ஏற்படுவதற்கு மகளிர் படைப்பிரிவின் முக்கிய பங்குடன் தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிக்கப்பட்டமையே முக்கிய காரணம் என்பதைச் சுட்டிக்காட்டினார்.இன்று தென்னிலங்கையில் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம் ஏற்பட்டுள்ளது அதனை நிவர்த்திக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் செயற்பட வேண்டும் எனக்கேட்டுக்கொண்ட அவர். இன்றைய காலக்கட்டத்தில் தென்னிந்திய கலைக்குப்பைகள் என்ற அளவிற்கு சென்றுள்ள இந்திய திரைப்படங்களில் இருந்து விடுபட்டு கலை இலக்கியப் படைப்புகள் மூலம் போராட்டத்தை முன்னிலைப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார். (25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.